# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"**

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு தைமாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 3-ம் இலக்கம்


## சுதேச வர்த்தமானம்

### தமிழில்நடத்துமாறு வேண்டுகோள்

இலங்கையிலே தமிழருக்குத் தலைநகராகவிளங்கும் யாழ்ப்பாணத்திலே தமிழ்மொழிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்; அதனால், யாழ்ப்பாணநகரசபையின் சகலநிர்வாகங்களையும் தமிழிலேயே நடத்தவேண்டுமெனக்கேட்டுத் "தமிழர் அறநெறிக்கழகம்" யாழ்ப்பாணநகரசபை மேயருக்கும், அங்கத்தவர்களுக்கும் ஒருவேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

### சுதந்திரதின்விழாவும் தமிழரசுக்கட்சியும்

மாசிமாதம் 4-ந்திகதியை இலங்கையின் சுதந்திரதினமாகத் தமிழரசுக்கட்சி கொண்டாடமாட்டாதென்று அக்கட்சியின் காரியதரிசி தெரிவித்திருக்கின்றார். ஏனெனில், அது தமிழ்ப்பேசும்மக்களின் சுதந்திரதினமல்ல என்று அவர்கூறுகின்றார்.

### வீடுகளைத்திருத்தக் கடன்

வெள்ளப்பெருக்கால் எண்பதினாயிரம்வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும், அவைகளைத் திருத்துவதற்குக் கடன்வழங்க 2கோடியே 40லட்சம் ரூபா தேவைப்படுமென்றும் வெள்ள நிவாரணக் கம்மிற்றியின்காரியதரிசி தெரிவித்திருக்கின்றார். வெள்ளத்தால் அழிவடைந்தபகுதிகளில் புனருத்தாரணவேலைகளைத் தொடர்ந்துசெய்வதற்கு 5கோடிரூபாவாவது வேண்டுமென்று பிரதமர் தெரிவித்திருக்கின்றார்.

### திரிகோணமலையில் இறக்குமதி

கொழும்புத்துறைமுகத்திலே பலமுறைகளிலும் வேலைநிறுத்தங்கள் நடைபெற்றகாரணமாக அங்குவந்த கப்பல்கள்சில திரிகோணமலைத் துறைமுகத்துக்கு அனுப்பப்படலாயின. நிலக்கரி, உணவுப்பொருட்கள், புதிய கார்கள் உட்படப் பலவிதசாமான்கள் இதுவரைஅங்கு இறக்குமதிசெய்யப்படவே, கொழும்பிலிருந்து பலலொறிகள்சென்று நாள்தோறும் அவைகளை ஏற்றிச்செல்லுகின்றன.

### வெள்ளப்பெருக்கும் நெற்சேதமும்

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபகுதிகளிலே நெல்வேளாண்மை செய்தவர்களுக்கு வெள்ளத்தால் ஒன்பதுகோடி ரூபா நட்டம்ஏற்பட்டிருப்பதாக முதல் அறிக்கைகளைக்கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக்கணக்கின்படி, 75லட்சம்புசல்நெல்லுக்குச் சேதம்ஏற்பட்டிருக்கிறது. இந்தப்பெரும்போகத்திலே 8,40,000ஏக்கரில் நெற்செய்கை நடைபெற்றதாகவும், இதிலே 2,50,000ஏக்கர் நெற்செய்கை முற்றாகச்சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கட்டுப்பாட்டு நீக்கம்

யாழ்ப்பாணத்திலே பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின்மீது விதிக்கப்பட்டிருந்தகட்டுப்பாடு சென்ற திங்கட்கிழமை நீக்கப்பட்டுவிட்டது. தற்போதுஇவைகள் அதிகமாகக் கிடைக்கின்றனவென்றும், றெயின்வண்டிச்சேவை ஆரம்பிக்கப்பட்டதும் அவைகள் தாராளமாகக் கிடைக்குமென்றும் அரசாங்கஅதிபர் தெரிவித்திருக்கின்றார்.

### வட்டக்கச்சிக்குச் செல்லுந்தெரு

வெள்ளப்பெருக்கினால் வட்டக்கச்சிக்குச்செல்லுந்தெரு ஒருமைல்தூரம் அடித்துச் செல்லப்பட்டு, அவ்வீதியிருந்த அடையாளமுமே இல்லாமற் போய்விட்டது. அதனால் கிளிநொச்சியுடன் ஒருவித போக்குவரத்துத் தொடர்புமில்லாத 950 குடும்பங்கள் பிரித்துவைக்கப்பட்டுத் தவிக்கலாயின. தற்போது இந்தத்தெருவைச் சீர்ப்படுத்தும்வேலை துரிதமாகநடைபெற்றுவருகிறது. வட்டக்கச்சி, கல்மடு, இராமநாதபுரமாகிய கிராமங்களிலுள்ள சுமார் 800 பேரைக்கொண்டு சகாயவேலை என்றமுறையிலே இந்த வீதி அமைக்கப்பட்டுவருகிறது.

### கட்சியிலிருந்து விலகினர்

யாழ்ப்பாணநகரசபை அங்கத்தவர்களில் சமசமாஜ கட்சியினராய் இருவர்உள்ளனர். அன்றுநிகழ்ந்த நகரசபைக்கூட்டத்திலே இவர்களில்ஒருவரான திரு. ஏ. விஸ்வநாதனே நகரசபைக் காரியாலயங்களில் உத்தியோகஸ்தர்களின்தொகை கூடுதலாக இருக்கிறதா, அல்லதுகுறைவாயிருக்கிறதா என்பதுபற்றிய பிரேரணையை எடுத்தாண்டார். அதனைச் சமசமாஜ கட்சியின் மறுஅங்கத்தவரான திரு. ஏ. துரைராசசிங்கம் எதிர்த்துப்பேசினார். இந்தப்பிரேரணையைச் சமசமாஜகட்சி எதிர்த்தமையால் திரு ஏ. விஸ்வநாதன் அக்கட்சியிலிருந்து விலகிக்கொண்டார்.

### காங்கேசன்துறை ஆஸ்பத்திரி

காங்கேசன்துறை, அரசினர்ஆஸ்பத்திரியை வேறிடத்துக்கு மாற்றுவதுசம்பந்தமான பிரச்சினை 1960-ம் ஆண்டுவரை பின்போடப்பட்டுள்ளது. இந்த ஆஸ்பத்திரியை இடம்மாற்றும்விஷயமாய் 1960-ம் ஆண்டுவரை தான் ஆலோசிக்கப்போவதில்லையென்று காங்கேசன்துறைப்பட்டினசபைக்குச் சுகாதாரமந்திரி எழுதியதிலிருந்தே இந்த முடிவுஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### விசாரணைக்கம்மிஷன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் 1949-ம்ஆண்டு நகரசபை அந்தஸ்தை அடைந்தகாலமுதல் அதிலே அங்கத்தவராய் இருந்தவர்கள்பலர்மீது லஞ்சக் குற்றச்சாட்டு அபிப்பிராயம்இருப்பதால் அதுபற்றி விசாரணைநடத்துவதற்கு லஞ்சவிசாரணைக் கம்மிஷன்ஒன்றை நியமிக்க வேண்டுமெனத் தலதாபனமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணைஒன்று சென்ற 13-ந்திகதி நடைபெற்ற யாழ்ப்பாணநகரசபைக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது.

### நகரசபையும் உத்தியோகஸ்தரும்

யாழ்ப்பாணநகரசபைக் காரியாலயங்களிலே உத்தியோகஸ்தர்களின்தொகை தேவைக்குச் கூடுதலாகஇருக்கிறதா, அல்லதுகுறைவாக இருக்கிறதா என்பதை விசாரித்தறிந்து ஒருமாதத்திற்கிடையிலே அறிக்கைஒன்று சமர்ப்பிக்குமாறு அங்கத்தவர்கள் மூவரைக்கொண்ட உபகம்மிற்றிஒன்று நியமிக்கப்படவேண்டுமென்ற ஓர்பிரேரணை சென்ற 16-ந்திகதியன்று யாழ்ப்பாணநகரசபையின் புதியநிர்வாக முதற்கூட்டத்திலே நிறைவேறியிருக்கின்றது. இந்தஉபகம்மிற்றியின் அங்கத்தவர்களாகத் திரு. ஏ. விஸ்வநாதன், திரு. ஏ. ஜே. காசிப்பிள்ளை, செனற்றர் ஜி. நல்லையாஎனும்மூவரும் தெரியப்பட்டிருக்கிறார்கள்.

### சிங்களஸ்ரீ பகிஷ்காரம்

சிங்களஸ்ரீ பகிஷ்காரஇயக்கத்தை மீண்டும்இலங்கையின் சுதந்திரதினமாகிய வருகிறமாசிமாதம் 4-ந்திகதி ஆரம்பிப்பதென்று தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணியின் ஆறுவதுவருடாந்த கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அத்துடன் சுதந்திரதினத்தைத் துக்கதினமாக அனுட்டிக்கும்படி தமிழ்ப்பேசும்மக்களைக் கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

### திரும்வண்டிகளின் அந்தியகாலம்

கொழும்பிலே வருகிறபங்குனிமாதம் 1-ந்திகதியோடு திரும்வண்டிகளின் போக்குவரத்து நிறுத்தப்படவிருக்கின்றது. புறக்கோட்டை—கிறுன்பாஸ் பாதையில் தற்சமயம் ஓடிக்கொண்டிருக்கும் பதினைந்து திரும்வண்டிகளும்அன்றுமுதல் ஓடாது நிறுத்திவிடப்படும். இப்பதினைந்து திரும்வண்டிகளும் ஏலத்தில் விற்கப்பட்டால் வண்டிஒன்றுக்கு ஆயிரம் ரூபாவீதம் கிடைக்குமென நகரசபை எதிர்பார்க்கிறது.

### "இது மக்கள் அரசாங்கம்"

கொழும்புத்துறைமுகத்திலும், மற்றும்ஸ்தாபனங்களிலும் வேலைசெய்யும் தொழிலாளர்கள் மூன்றாம்வகுப்புத்திக்கெற்றுகளுடன் இரண்டாம்வகுப்பில் பிரயாணஞ்செய்வதாகக் கம்பஹாவுக்கும், கொழும்புக்குமிடையே பிரயாணஞ்செய்யும் இரண்டாம்வகுப்புப் பிரயாணிகள் முறையீடுசெய்ததின்பேரில் பரிசோதனைசெய்வதற்கென்று சென்ற வியாழக்கிழமை கனேமுல்லை றெயில்வே ஸ்ரேஷனுக்கு அனுப்பிவைக்கப்பட்ட 15 பாதுகாப்பு அதிகாரிகளும் அவ்விடஞ்சென்று அங்குவந்துநின்ற ஓர்றெயின்வண்டியைச் சோதித்தபோது, அதிலே 13மூன்றாம்வகுப்புப்பிரயாணிகள் இரண்டாம்வகுப்பில் பிரயாணஞ்செய்யக்கண்டுபிடித்து, அவர்களை ஸ்ரேஷன்மாஸ்றரின் அறைக்குக் கொண்டுசெல்லவே, தங்களைவிடுவிக்குமாறு அவர்கள் மற்றப்பிரயாணிகளைக் கேட்டுக்கொண்டார்கள். அப்போது பெருந்தொலகயான மூன்றாம் வகுப்புப்பிரயாணிகள் றெயின்வண்டியிலிருந்துஇறங்கிப் பாதுகாப்புஅதிகாரிகளைச் சூழ்ந்துகொண்டு அவர்களை விடுதலைசெய்யுமாறு கோரினரென்றும், "இது எங்கள் அரசாங்கம், இதுமக்கள் அரசாங்கம், நீங்கள் இப்படிச்செய்யக்கூடாது" என்று கூச்சலிட்டுக்கொண்டு பாதுகாப்புஅதிகாரிகளைத் தாக்கினரென்றும், அப்பொழுது இந்தஅதிகாரிகளில் மூன்றுபேர் காயமடைந்தனரென்றும் சொல்லப்படுகிறது. அத்துடன் ஸ்ரேஷன்கட்டடத்தின்மீதும் கற்கள்வீசப்படலாயின. அதனால், கண்ணாடியன்னல்களும், மற்றும் றெயில்வேச்சொத்துகளும் சேதமடைந்தன. பாதுகாப்பு அதிகாரிகளில்ஒருவர் பலமானகாயமடைந்து கொழும்புப்பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படலாயினர். பிந்தப்பொலிசர் தருவிக்கப்பட்டார்கள்.

---

### அதுவே என்வாழ்வின் லட்சியம் சுவாமி!

தாய் அந்தப்பாலகனை மிகுந்தஅக்கறையுடன் வளர்த்துவந்தாள். கல்வியிலும், பக்தியிலும், கிறீஸ்துவ பண்புகளிலும் விளங்கிவந்தான் பாலியன். அவன்உள்ளத்தில் குருத்துவத்தின் மகிமையையும், பெருமையையும், அந்தஅந்தஸ்துக்குத் தேவையான தியாகமனப்பான்மையையும் அடிக்கடி அவனுக்குஅவள் எடுத்துக்கூறிவந்தாள். மைந்தனும்கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டிருந்த ஒருநாள் பங்குக் குருவானவருக்கும், அவன்தாய்க்கும் பின்வருமாறு ஓர்சம்பாஷணை நடைபெற்றது.

"மகளே! உன்மகனை நான் குருமடத்துக்கு அனுப்பப் போகிறேன்; என்னசொல்லுகிறாய்?" என்றார் குருவானவர்.

அதைக்கேட்டதாய் இன்பசாகரத்தில் அமிழ்ந்தியவளாய், "சுவாமி! நானும் அதைப்பற்றி உங்களுடன் கலந்துபேசத்தானே இங்குவந்திருக்கிறேன்; எந்தவிதமும் எனதுஅருமைமகன் குருவாகவரவேண்டும்; அதுவே என்வாழ்வின் லட்சியம்; அதைக்காட்டிலும் இந்தஉலகில் எனக்குக் கிடைக்கக்கூடிய பெரும்பாக்கியம் வேறென்ன இருக்கிறது சுவாமி" என்று ஆனந்தக்கண்ணீர்பெருகக் கூறினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதோட்டமும் வெள்ளப்பெருக்கும்

— நாட்டுத்தூதன் —

சென்றஜைப்பசிமுதல் தொடர்பாகப் பெய்துவந்த பெருமழையாலும், அருவியாறு திடீரெனப் பெருக்கெடுத்ததாலும் வெள்ளப்பிரவாகம் ஏற்பட்டு, ஆற்றங்கரையை அடுத்துள்ள கட்டை அடம்பன், மடுறோட், இசமாலைத்தாழ்வு, தம்பனை, கற்கடந்தகுளம் ஆதியாம கிராமங்கள் காத்திராப்பிரகாரம் அதனால் முற்றுகையிடப்படலாயிற்று. அதனால்மக்கள் செய்வது இன்னதென்றறியாது திகைத்துமலைத்துச் சித்தப்பிரமை கொண்டவர்களாய்த் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு சிற்றாலயங்களிலும், தென்பட்ட விருட்சங்களிலும்போய்ச் சரணடைந்தார்கள். பின்னர் ஆற்றுவெள்ளம் மேலும்மேலும் கங்குகரையின்றிப்பெருகி முருங்கன் உட்படத் தென்மாதோட்டம்முழுவதையும் முற்றுகையிட்டுக்கொள்ளவே மக்களை மிகுந்தகஷ்டத்துடன் கரைசேர்க்கவேண்டியிருந்தது. அன்றேடு புகையிரத, பகிரங்கதெருக்கள் பாதிக்கப்பட்டமையால் போக்குவரத்து, தபால்தந்திவசதிகள் துண்டிக்கப்படலாயின.

இவ்விதச் சண்டவேகத்தோடு கட்டுக்கடங்காது கடந்துவந்த ஆற்றுவெள்ளத்தைத் தன்னுள் அடக்கிக்கொள்ளவியலாது 27-ந்திகதியன்று அதிகாலை கட்டுக்கரைத்தடாகத்தின் பாரிய அணைக்கட்டு உடைந்துபோகவே, திரண்டெழுந்த வெள்ளமானது சமுத்திரம் கரைபுரண்டோடியவாறாய் விரைந்துசென்று வடமாதோட்டத்தையும் ஒருகைபார்த்தது.

ஆயினும், அரசாங்கஅதிபர் முன்னதாக எச்சரித்ததின்பேரில் மக்களுள் அநேகர் மன்னார்ப்பட்டினத்திலும், மாந்தைத்திடர்நிலத்திலும் சரண்புகுந்துகொண்டனர். மற்றும் அநேகர் கிராமங்களிலுள்ள ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம்புகுந்தனர். வெள்ளத்தின்வாய்ப்பட்ட மக்களைமீட்பதிலும், போஷிப்பதிலும் அரசாங்க அதிபர்அவர்களும், பாராளுமன்றமன்னார்ப்பிரதிநிதி திரு. வி. ஏ. அழகக்கோன்அவர்களும், அடம்பன், முருங்கன், நானாட்டான் கட்டளைக்குரவாவர்களும், பொலிஸ்பகுதியினரும் புகழ்ச்சிக்குரிய தியாகசிந்தையுடன் உயிரையே திரணமாகமதித்து உழைத்தவர்தமை போற்றத்பாலதாகும். இவர்களின்முயற்சியால் பெருந்தொகையான மக்கள் உயிர்தப்பிப் பிழைத்தனரெனினும் ஆற்றோரங்களிலுள்ள கட்டை அடம்பன், தம்பனை, இசமாலைத்தாழ்வு, கொம்புதூக்கிமுதலியகிராமங்களில் சிலர் உயிர்இழந்ததாகத் தெரியவருகிறது.

முசலிக் காரியாதிகாரி பிரிவிலே வங்காலைநீங்கலாக ஏனையபகுதிகளும், வடபகுதியிலே பறப்பாங்கண்டல்உட்பட மாந்தைக்காரியாதிகாரிபிரிவில் விடத்தல்தீவுநீங்கலாக ஏனைய பகுதிகளும் வெள்ளத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. உயிலங்குளத்திலும், அதன் அயற்கிராமங்களிலும், பெரியநாவற்குளம், சிறுநாவற்குளம், பாப்பாமோட்டைமுதலியகிராமங்களிலும்வெள்ளப்பிரவாகத்தின்வேகம் குறைவாயிருந்ததாகச் சொல்லப்படுகிறது. வீட்டுத்தளபாடங்களும், ஆடு, மாடு, கோழிமுதலாம்பிராணிகளும வெள்ளத்தால்அள்ளப்பட்டுப்போயின. கற்கட்டிடங்கள்தவிர ஏனைய இல்லிடங்களெல்லாம் இடிந்துவிழுந்து நாசமாயின. வீடுவாசல்களை இழந்த ஆயிரக்கணக்கான அகதிகளுக்கு ஆகாய விமானங்கள் மூலம் ஆகாரங்களும், ஆடைகளும் அளிக்கப்பட்டன. கூப்பன் அரிசி இலவசமாகக் கொடுபட்டதோடு, கஷ்டநிவாரணநிதிகளும் வழங்கப்பட்டுவருகின்றன. என்றுமில்லாத விதமாகச் செழுமையுற்று வளர்ந்து, பச்சைப்பசேலெனப் பசிய காட்சியளித்துநின்ற நெற்பயிர்களெல்லாம் அழிந்தொழிந்தன. எஞ்சியபயிர்களும் விளைவதற்குத் தண்ணீர் இல்லாததால் இவற்றின் பலனையும் எதிர்பார்க்க முடியாது. சென்ற இருவருடங்களிலும் தண்ணீர் இல்லாமையால் பஞ்சத்தின் வாய்ப்பட்டிருந்த இப்பகுதி இம்முறை வெள்ளப்பெருக்கால் பஞ்சத்தின்வாய்ப்படத் தொடங்கியிருக்கிறது. இவ்விதபடுபயங்கரமான ஓர் வெள்ளப்பிரவாகம் இதற்குமுன்எப்போதாவது இங்கு உண்டாகவில்லையென்று காலங்கண்ட மனிதர் கதைத்துக்கொள்ளுகின்றனர். இப்போது கட்டுக்கரைத்தடாகம் வரண்ட மைதானமாக அளிக்குங் காட்சியானது ஓர் கண்ணாறுவியான காட்சியாகுமெண்க.

—(⌒)—

# வெள்ளக் கொடுமைதான் என்னே!

சமீபத்தில்ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் மடுறோட் — கட்டை அடம்பன் கிராமங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மன்னார்ப்பிரிவிலேயே அதிகஉயிர்ச்சேதமும், பொருட்சேதமும்பெற்ற கிராமங்களாகவே இவைகள் காட்சியளிக்கின்றன. இவ்விடங்களைச் சுற்றிப்பார்ப்போரும், இவைகளின்வழியாகப் பிரயாணஞ்செய்வோரும் இவற்றின் பரிதாப நிலைமையைக் கண்டு மனமுருகிக் கண்கலங்குகின்றனரென்றால், இக்கிராமவாசிகளின் நிலைபரம் எவ்வளவு கவலைக்கிடமானதென்பதை எண்ணியெண்ணி எவருமே அநுதாபப்பட வேண்டியவர்களே.

**மடுறோட்:** மடுறோட்டிலே மாதாகோவில், றெயில்வே ஸ்ரேஷன் கட்டிடங்கள், ஒவசியர்இல்லம் ஆதியனதவிர ஏனைய வீடுகளும், கடைகளும், கந்தோர்களும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கின்றன. கடைகளில் இருந்துவந்த அலுமாரிகள், மேசைகள், கதிரைகள், மற்றும் தளபாடங்களை எல்லாம் மேற்குமுகமாய் ஒருமைல்தூரத்துக்கு வெள்ளம் அள்ளிக்கொண்டுபோய் உயர்ந்த மரக்கொம்புகளில் வைத்திருக்கும் கொடுமையான காட்சியை இன்றும் காணலாம். தபாற்கந்தோர் முற்றாகப் பாதிக்கப்பட்டமையால் அதன் உயர்ச்சிகுன்றித் தற்காலிகமான ஓரிடம் தபால்விநியோகிக்கும் கந்தோராக மாத்திரமே காட்சியளிக்கின்றது.

**கட்டை அடம்பன்:** இங்குள்ள 30 வீடுகளும் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன. சுவர்கள்இடிந்தும், கூரைகள்பறந்தும், வீட்டில்இருந்த சாமான்கள் சிதைந்தும் பரிதாபகரமான நிலையில் தோற்றமளிக்கின்றன. உப்புமுதல் உள்ளதெல்லாம் இழந்த மக்கள் தங்கள் சட்டிபானைகளையும், பாய்தலையணைகளையும், உரல் உலக்கைகளையும், பெட்டிசுளகுகளையும், மற்றும் தட்டுமுட்டுகளையும் காடுகாடாய்த் திரிந்து தேடுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இங்குள்ள கோயில்சுவர்கள் விழுந்து கூரையுடன் காணப்பட்ட போதிலும் மக்கள் அதனைத் திருத்துவதில் இவ்வெள்ளக்கொடுமையின் மத்தியிலும் மிக்க ஆர்வமுள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

**பாடசாலை:** இப்பாடசாலை சமீபத்தில் மிக்க உறுதியாகக் கட்டப்பட்டிருந்தபோதிலும் இருபக்கச்சுவர்களை வெள்ளப்பிரவாகம் கொள்ளைகொண்டுவிட்டது. பாடசாலையில் 20அடிக்குத் தண்ணீர் எழும்பிப் பாய்ந்த அடையாளங்கள் காணப்படுகின்றன. வெள்ளத்தோடுவெள்ளமாய் அள்ளுண்ட பாடசாலைத் தளபாடங்களில் சிலவற்றை ஆசிரியரும், மாணவர்களும் தேடிப்போய் அரைமைல்தூரத்தில் கண்டெடுத்திருக்கின்றார்கள். மற்றும் பாடசாலைச்சாமான்களும், ஆசிரியர்களின் பொருட்களும் தண்ணீர்மயமாக்கப்பட்டுச் சேதமடைந்திருக்கின்றன. இக்கிராமத்தின் அயலில் உள்ள கொம்பன்சாய்ந்தான் என்னும் இடத்தில் இருந்துவந்து இப்பாடசாலையில் கல்வி பயின்றுவந்த மூன்று மாணவர்கள் வெள்ளத்தால் உயிர்இழந்தார்கள் என அறிந்து மிகவும்கவலகின்றோம்.

**இலவச உதவிகள்:** சேதமடைந்த இருகிராமங்களுக்கும் இருபகுதியாக உதவிகள் கிடைத்திருக்கின்றன. வெள்ளம் பிரமாதமாகப் பெருகிவருவதை அறிந்த இக்கிராமவாசிகள் ஏலவே மடுப்பதியைநோக்கி ஓடோடிச்சென்ற அந்தமான வேளையில் மடுப்பரிபாலனர் வண. ஜே. சி. செல்வரத்தினம் சுவாமியவர்கள் போதிய உணவும், உடையும், மற்றும்வேண்டிய யாவும் கொடுத்து உதவியமையால் மக்கள் பெரும் ஆறுதல் அடைந்து உயிர் பிழைத்தார்கள். மேலும அவர்களின் இல்லங்களைப் பார்வையிட்டுச் சிறு குடிசைகளை அமைப்பதற்குமுதலாய் வேண்டியஉதவிகளைச் செய்து கடைசித்தருணம்வரை அவர்களின் அவசியங்களில் உதவிபுரிந்துவருவதில் சுவாமியார்செய்த தொண்டினை மக்கள்என்றும் மறக்கமுடியாதவர்களாய் இருக்கின்றார்கள். இன்றுமுதல் தினமும் அரசாங்க அதிகாரிகள் இக்கிராமங்களுக்குச் சமுகமளித்து வேண்டிய உணவுவகைகளையும், மற்றும் தேவைகளையும் தாராளமாய் அளித்துவருகின்றார்கள், வீடு, வயல், ஆடுமாடு, பொருள்பண்டங்கள் இழந்தோருக்கு மேலும் போதிய உதவிகளை வழங்குவதற்குக் கிராமத் தலைவர்கள் மூலம் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

— நிருபர்

12-1-58

—(⌒)—

# மன்னாரும் கஷ்டநிவாரணமும்

மன்னார்ப்பகுதியிலே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென்று 20,500 சாறங்கள், 10,500 பனியன்கள், 10,500 சட்டைகள், 1,500 துவாய்கள்ஆதியன மன்னார்அரசாங்கஅதிபரிடம்போய்ச் சேர்ந்துள்ளன. அவரது மேற்பார்வையிலே இவைகளைவழங்கும்வேலை தற்போது ஆரம்பமாகிவிட்டது. இவைதவிர, இந்தியஅரசாங்கத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட துணிமணிகளிலும் ஒருபகுதி கூடியவிரைவில்மன்னார்ப்பகுதிக்குக் கிடைக்குமென்றும், அதுவும்உடனடியாகவழங்கப்படுமென்றும் தெரியவருகிறது.

வெள்ளஅகதிகளுக்கு வழங்குவதற்கென்று அமெரிக்க உதவிமூலம் கிடைத்த பொருள்களும் கடந்தஇருவாரகாலமாக அப்பகுதிக்காரியாதிகாரிகளாலும், கிராமத்தலைமைக்காரர்களாலும் வெள்ளஅகதிகளுக்குக் கொடுக்கப்பட்டுவருகின்றன. முசலிப்பகுதி நீங்கலாக ஏனையஇடங்களில் சுமார் 8,000 குடும்பங்களுக்கு அமெரிக்கஉதவியால் கிடைத்த பால், இறைச்சி, பழவகைகள், மீன், கோதுமைமா ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச்சங்கம்முதலியஸ்தாபனங்களால் அளிக்கப்பட்டதுணிகள், அரிசி, மற்றும் உணவுப்பொருள்கள் ஆதியனவும் உடனுக்குடன் மன்னார் அரசாங்க அதிபரால் வெள்ள அகதிகளுக்கு அனுப்பப்பெற்று வழங்கப்படுகின்றன. மன்னார்க்கச்சேரி உதவிஅதிகாரி இரவுவெகுநேரம்வரை தமதுகாரியாலயத்திலஇருந்து நிவாரணஉதவி சம்பந்தமான உத்தியோகஸ்தர்களின் சேவைகளை மேற்பார்வையிட்டு வருகிறார்.

இதுவரை மன்னார்ப்பட்டினத்துடன் எதுவிததொடர்புமற்றிருந்த முசலிப்பகுதிக்கு அல்ஹாஜ் எம். எல். அப்துல்ஜபார்தலைமையில் இரத்தினபுரியினின்றுவந்த முஸ்லிம்தொண்டர்களின் கோஷ்டியொன்று சென்ற 17-ந்திகதியன்று மிகுந்தகஷ்டத்துடன் சுமார் பன்னிருமைல்தூரம் நடந்துசென்று நிவாரணசேவைகளில் ஈடுபட்டது. இரத்தினபுரி முஸ்லிம்பெருமக்களால் நன்கொடையளிக்கப்பட்ட பெருந்தொகையானபுதியசாரங்கள், கம்பளங்கள், புடவைகள், துவாய்கள், பனியன்கள், தேயிலை, காப்பிமுதலியன அங்கே விநியோகிக்கப்பட்டன. முசலிப்பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின்நிலை பரிதாபமானதென்றும், அங்கு மக்கள் அடைந்துள்ள நட்டம் ஈடுசெய்ய முடியாததென்றும் அல்ஹாஜ் அப்துல் ஜபார் கூறியிருக்கிறார்.


## TUITION IN Shorthand-Typewriting and Music

Shorthand : Pitman's Phonetic System
Typewriting : Vertical Touch Method
} Theoretical course and Advanced Level

Students (boys and girls) prepared for Pitman's London, London Chamber of Commerce and other Examinations.

**Shorthand Speed Training a Speciality**

Several students already trained are in Govt. Service, Business Firms and other Institutions in Ceylon and India.

Church Music : English and Plain-Chant (Gregorian)

Individual attention paid to each student.

JOSEPH ANDREW,
"De Mazenod", 4th Cross Street, Jaffna.

## EDUCATIONAL

Pitman-qualified Stenographer will take in girl-students for tuition in Shorthand and Type-writing. If desired, they will be prepared for the London Chamber of Commerce, Complete or Part Higher Certificate for Short-hand Typists, G. C. E. Ord. Level and other examinations.

Apply in person to :—

(Miss) M. M. Thuraisingham,
20, Third Cross Street,
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### குருமாரும் இரத்ததானமும்

பிறநாடுகளைச்சேர்ந்த குருமார் உட்படத் தற்போது அதிகந் தொகையான குருமார் றோமாபுரியிலுள்ள ஆஸ்பத்திரிகளின் இரத்தவங்கிகளுக்கு இரத்ததானம் செய்துவருகின்றார்களென வத்திக்கான்வானொலி தெரிவித்திருக்கின்றது. இந்தஇரத்ததானமானது "தமதுஉடன்மனிதசிருட்டிகள்மட்டில் அவர்கள் கொண்டுள்ள நேசபாசத்திற்குத் திண்மையான ஓர் எடுத்துக்காட்டாகும்"என்று வானொலி தெரிவித்துள்ளது.

### கத்தோலிக்க ஜனாதிபதி

சுவிற்சர்லாந்த சமஷ்டிக்குடியரசின் புதியஜனாதிபதியாகத் திரு. தோமஸ் ஹொலென்ஸ்ரீன்எனும் கத்தோலிக்கபிரமுகர் நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றார். 61 வயதுடையவரான இவர் ஓர்சட்டசாஸ்திர பண்டிதர். 1920-ம் ஆண்டுமுதல் தாம்பிறந்த சென்கோல்நகரில் நியாயவாதியாகக் கடமையாற்றிவந்து பின்னர் 1936-ம்ஆண்டு சென்கோல் மாகாண அரசாங்கமகாசபையிலும், அடுத்தவருடம் தேசிய அரசாங்கசபையிலும் அங்கத்தவரானார். 1949-ம்ஆண்டுமுதல் சமஷ்டிஅரசாங்க மகாசபையிலே கத்தோலிக்க குழுவின் தலைவராயிருந்தார்.

### கிரீஸ்துநாதரின் பாரியசுரூபம்

மேற்கிந்திய தீவுகளைச்சேர்ந்த ஹியூபாதீவிலுள்ள ஹவனாக்குடாக்கடலின் வாயிலிலே 33மீற்றர் — அதாவது100அடிக்குமேல் உயரமான கிறீஸ்துநாதரின் பாரியதிருச்சுரூபம்ஒன்று நிறுவப்படவிருக்கிறது. இதற்குஏற்படும் செலவுமதிப்பு பத்துலட்சம்டலராகும். அதன்உயரத்தின் ஒவ்வோர்மீற்றரும் கிறீஸ்துநாதரது வாழ்க்கையின் ஒவ்வோர்வருடத்தையும் பிரதிபலித்துக்கொண்டிருக்கும். நிகழும்1958-ம் ஆண்டின் இறுதியிலே நிறுவப்படுமென்று எதிர்பார்க்கப்படும் இச்சுரூபம் கடலிலே பலமைல்தூரத்திலிருந்து கண்டுகொள்ளக் கூடியதாயிருக்கும்.

### சந்தானாள்திருசேத்திர நூற்றாண்டுவிழா

கனடாதேச குவெபெக்நகரிலே போபிறேபதியிலுள்ள உலகப்பிரசித்திபெற்ற சந்தானாள்திருசேத்திரம் ஸ்தாபகமான 300-ம் ஆண்டுவிழாவும் இவ்வருடத்திலே பெரிதும்ஆடம்பரமாகக் கொண்டாடப்படவிருக்கிறது. இந்தவிழாக்கொண்டாட்டம் வருகிறவைகாசிமாதம் 4-ந்திகதி ஆரம்பமாகி, ஐப்பசி12-ந்திகதி வரையிலே தொடர்ந்து நடைபெறும். ஆடிமாதம் 17-ந்திகதி ஆரம்பமாகி ஆடிமாதம்26-ந்திகதி சந்தானாள்திருநாளன்று முடிவாகும் பெரியஉற்சவகாலமே அங்கு பெரும்யாத்திரைகாலமாய் இருக்கும். போபிறேபதியில் சந்தானாள்பேரால் முதலாவது சிற்றாலயம் 1658-ம்ஆண்டு அமைக்கப்படலாயிற்று. அவ்வருடத்திலேயே அத்திருசேத்திரத்தில் முதலாவதுபுதுமை நடைபெற்றது. வாதரோகங்கண்டு நடந்துகொள்ளவியலாது முடவராயிருந்த லூயிஸ் கிய்மண்ட் என்பவர் சிற்றாலயத்தின் அத்திபாரத்தில் மூன்றுசிறியகற்களை வைத்ததும் உடனடியாகவும், நிரந்தரமாகவும் குணமடையலாயினர். நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு 30லட்சம்யாத்திரிகர்கள் அங்குசெல்வார்களென மதிப்பிடப்படுகிறது.

### யூதரான கத்தோலிக்ககுருமார்

திருமீட்பர்சபையைச் சேர்ந்தவரும், யூதசமயத்திலிருந்து மனந்திரும்பியவருமான வண. ஆர்தர் கிலிபர்சுவாமியார் சமீபத்திலே நியூயோக்நகரில் தமதுகுருத்துவ வெள்ளியூபிலித் தோத்திரபூசையை நிறைவேற்றியபோது அவரைப்போலவே மனந்திரும்பிய வண. எலியாஸ்மேயர், வண. அம்புறோஸ் சாவர், வண. மேயர் ரோபி, வண. அலெக்சிஸ், வண. பீற்றர் ஜேக்கப்ஸ்எனும் யூதரான ஐந்துகத்தோலிக்ககுருமார் அவருக்கு உதவிபுரியலாயினர். பூசையிலே சமுகமாயிருந்த விசுவாசிகளில் 150பேருக்குமேற்பட்டோர் யூதரானகத்தோலிக்கராவர். இவர்களில் தியாக்கோன், உபதியாக்கோனாகஉதவிய வண. எலியாஸ், வண. அம்புறோஸ் எனும் குரவர்கள்இருவரும் இந்த யூபிலிக்கு ஐந்துதினங்களின் முன்னரே குருப்பட்டம்பெற்றவர்கள். இவர்களின் முதற்பூசையிலே யூதரான சுமார்350கத்தோலிக்கர் சமுகமாயிருந்தனர். யூபிலி நடைபெற்ற மறுதினம் வண. டேவிட் எவ்றேய்ம்சன் எனும் மற்றோர்யூதகுருத்துவமாணவர் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றனர். இவர் நியூயோக்நகர் வாசியான திரு. அல்பிறெட் எவ்றேய்ம்சன்எனும் யூதகத்தோலிக்கரின் சிரேஷ்டபுதல்வர்.

### கருதினல் மின்ட்சென்ரிஆண்டவர்

ஹங்கேரியபுரட்சியின் மறக்கப்பட்டமனிதர்—கம்யூனிஸ்தர்களாலும், சுதந்திரஉலகத்தாலும் வெகுவாகமறக்கப்பட்ட கருதினால் மின்ட்சென்ரிஆண்டவர் புடாபெஸ்ற்நகரிலே சபாத்சாக்றர் எனுமிடத்தில் 12-ம்இலக்க வீதியிலுள்ள மேல்மாடிஅறைஒன்றில் இன்னுமேதனிமையாக இருந்துவருகின்றார். ஒருவருடத்துக்குமேற்பட அவர் கம்யூனிஸ்தர்களால் கைவைக்க முடியாத ஓர்சிறைக்கைதியாய் அமெரிக்க அரசாங்கதூதுவரின் பிரத்தியேக காரியாலயத்தில் சஞ்சரித்துவருகின்றார். மேலைத்தேசங்களின் பத்திரிகைநிருபர்கள் அவருடன் கலந்துபேச அமெரிக்கஅரசாங்க பகுதி அனுமதியாதபோதிலும் அவர்கள் வியென்னாநகரிலே நம்பத்தகுந்தபகுதிகளில் சொற்பம் சொற்பமாகப் பெற்றுக்கொண்ட தகவல்களைத்திரட்டிக் கருதினால் ஆண்டவரின் வாழ்க்கைபற்றிய விபரத்தை வெளியிட்டிருக்கின்றார்கள். அதிகாலையிலே அவர் நித்திரைவிட்டெழுந்து திவ்விய பூசை நிறைவேற்றியபின் காலைப்போசனம் அருந்திவிட்டுத் தமது வாழ்க்கையின் சரித்திரவரலாற்றை—அதாவது அறுபதுலட்சத்துக்குமேற்பட்ட ஹங்கேரிய கத்தோலிக்கரைத் தலைமைதாங்கித் தாம்வழிநடத்திவந்ததும், "தேசதுரோகியாகவும், வேவுகாரனாகவும்" தாம்குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையிருந்ததும், 1956-ம் ஆண்டிலே திரும்பவும்ஐந்துநாள் சுதந்திரம்பெற்று இருந்ததுமான வரலாற்றைஎழுதுவதிலே கருத்தாயிருந்துவருகின்றாரென அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

### சிலுவைசுமந்துகொண்டு லூர்துபதிக்கு

ஏண்ஸ்ற் எமில் வால்றர்எனப் பெயரிய ஜேர்மன்கத்தோலிக்கர் ஏழுஅடிநீளமான ஓர்சிலுவையைச் சுமந்துகொண்டு பேர்ளின் நகரிலிருந்து சென்றபுரட்டாசி மாதம் 30-ந்திகதியன்று லூர்துதிருப்பதிக்குக் கால்நடையாகப் புறப்பட்டுத் தற்போது அத்திருசேத்திரத்தை அண்மிக்கொண்டிருக்கின்றார். அத்திருப்பதியிலே வருகிறமாசிமாதம் நூற்றாண்டுவிழாக்கொண்டாட்டம ஆரம்பமாகும்போது அங்குசமுகமாயிருக்க அவர் திட்டமிட்டிருக்கின்றார். அதன்மேல்அவர் கொன்னேர்ஸ்றாத் எனுமிடத்திலுள்ள தமது இல்லத்துக்குக் கால்நடையாகத் திரும்புவார். அவர்சுமந்துசெல்லும்சிலுவையிலே லூர்துஎனும்நாமமும், ஜப்பானிலே அணுக்குண்டால் அழிக்கப்பட்ட முதலாவதுநகரமாகிய ஹிறோஷிமாஎனும்நாமமும் காணப்படுகின்றன. அடுத்தவருடம் இவர் ஜப்பானுக்குச் சென்று, யுத்தகொடுமைகளை எதிர்த்துக் கண்டனஞ்செய்யுமுகமாக அந்தச்சிலுவையை ஹிறோஷிமாவிலே நாட்டத்திட்டமிட்டுவருகின்றார்.

### வத்திக்கான் காட்சிமண்டபம்

பெல்ஜியதேச பிறசெல்ஸ்நகரிலே வருகிறசித்திரைமாதம் ஆரம்பமாகவிருக்கும் சர்வதேச பொருட்காட்சியிலே "தேவனின் நகரம்"என்ற வத்திக்கானின் காட்சிப்பகுதியில்சுமார் 26தேசங்கள் கலந்துகொள்ள விருக்கின்றன. அதிலே வத்திக்கான் காட்சிமண்டபம் அபூர்வகாட்சிப் பொருட்களையும், சுமார் 2,500 பேருக்குப்போதிய ஆசனவசதியைக்கொண்ட ஓர்"செபதல"த்தையும் அடக்கியதாயிருக்கும். றோமாபுரிக்குவெளியே பொருட்காட்சிஒன்றில் பரிசுத்தஸ்தானம் அதிகாரபூர்வமாகக் கலந்துகொள்வது இதுவே முதன்முறையாகும். சித்திரை 17-ந்திகதி காட்சிஆரம்பமாகும், 1,50,000 சதுரஅடிவிஸ்தீரணமான வத்திக்கான் காட்சித்தலத்திலே நூற்றுக்கு 70விகிதமானபகுதியில் கதவுகளைக்கொண்டிராத ஓர்அலங்காரமண்டபம் அமைந்திருக்கும். அதனுள் பெரியகோவில்ஒன்று எப்போதும் திறந்தபடியே இருந்துவரும். அதனால் பல்வேறு நாடுகளையுஞ் சேர்ந்த தரிசகர்களால் தேசியசமய வழிபாடுகள் நடத்தக்கூடியதாயிருக்கும். இந்தக்கோவிலிலே காலையும்மாலையும் திவ்வியபூசைகள்நிறைவேறும். காட்சியிலே றோமைநகரிலுள்ள "கற்றக்கோம்ஸ்"எனப்படும் சுரங்கஅறைகளும் நிர்மாணிக்கப்பட்டிருக்கும். வத்திக்கான் நூதன பொருட்காட்சிச்சாலை தனது விலையேறப்பெற்ற சித்திரக்கலைப் பொருட்கள் சிலவற்றைக் காட்சிக்குக் கொடுத்துதவும்போல் இருக்கிறது. காட்சிமண்டபத்திலே சொற்பொழிவுகள், கூட்டங்கள், சமயநாடகங்களுக்கென்று 1,300பேரைஅடக்கக்கூடிய ஓர்பகிரங்கமண்டபம் அமைந்திருக்கும். தேவனின்நகர பொதுநோக்கம், எல்லாக்காலங்களிலும் எல்லாமனிதரினதும், எல்லாத்தேசங்களினதும் வாழ்க்கையிலே திருச்சபையின்பங்கை விளக்குவதாகும்.

### தென்துருவம் ஆசீர்வதிக்கப்பட்டது.

சமீபத்திலே பூமியின்தென்துருவத்தைஅடைந்து, தற்போது அங்கேகூடாரம் அடித்திருக்கின்ற அமெரிக்க இராணுவ-விஞ்ஞான ஆராய்ச்சிக்கோஷ்டி அங்கத்தவர்களால் அன்று ஞாயிற்றுக்கிழமை அங்கு ஐக்கிய நாடுகளின் கொடிஒன்று ஏற்றிப் பறக்கவிடப் பட்டபோது அக்கோஷ்டியுடன் சென்றிருந்த அமெரிக்ககடற்படை விசாரணைக் குரவரான வண. லெயோன் டார்க்கோஸ்கிசுவாமியார் தென்துருவத்தைஆசீர்வதிக்கலாயினர். ஐக்கியநாடுகளினதும், ஐக்கிய அமெரிக்கதேசத்தினதும் கொடிகளும், வட்டாகரமாய் வைக்கப்பட்டுள்ள எண்ணெய்ப்பீப்பாக்களும் தற்போது தென்துருவஸ்தானத்தைக் குறிப்பிடும்சின்னங்களாகத் திகழ்கின்றன.

### அதிகம் கத்தோலிக்க நகரம்

இங்கிலாந்தின் அதிகம்கத்தோலிக்க நகரமென்று சிறப்பாக அழைக்கப்படத்தக்கது லிவர்ப்பூல்நகரேஎன்றும், அத்தேசத்தில் சமயசுதந்திரம் அருளப்பட்டபின் அந்நகரில்தான் கத்தோலிக்கதிருச்சபை அதிகம்விருத்தியடைந்துள்ளதுஎன்றும் அந்நகர் அதிமேற்றிராணியாரான ஹீனன்ஆண்டவர் கூறுகின்றார். இற்றைக்கு நூறுவருடங்களின் முன் அந்நகரில் நான்குசிற்றாலயங்கள்மட்டும் இருந்தன. ஆனால், இன்றுஅந்நகர் கத்தோலிக்ககோவில்களால் தேங்கிப்போயிருக்கிறது. இவற்றிலே நூற்றுக்கு மேற்பட்டவைகள் ஞாயிறுவாரந்தோறும் திவ்வியபூசையின்போது மூன்று நான்குமுறை கத்தோலிக்கமக்களால் நிறைந்து தேங்குகின்றன. இற்றைக்கு 300 வருடங்களின்முன்னர் முற்றாகவே கத்தோலிக்கமயமாக விளங்கியிருந்த லிவர்ப்பூல்நகர் பிந்த நடைபெற்ற வேதகலாபனையால் பெருங்கஷ்டத்துக்குள்ளாய் மங்குவதாயிற்று.

---

● பரிசுத்ததேவதாயார் அர்ச். பெர்னதேத்அம்மாளுக்கு அளித்த காட்சிகளின் நூற்றாண்டுவிழாவை மகிமைப்படுத்துமாறு வருகிறபுரட்டாசி மாதம் 14-ந்திகதிமுதல்18-ந்திகதி வரையில் லூர்துபதியில் மரியாயின் மகாநாடுஒன்று நடைபெறவிருக்கிறது. அதற்குச் சமுகமளிக்கக்கூடியதாய் ஏற்கனவே ஐக்கியஅமெரிக்க தேசத்திலிருந்து பெரியயாத்திரைஒன்று நடத்துதற்கான ஆயத்தம்நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தை மாதம்

**பொதுக்கருத்து:** கிறீஸ்துநாதர் ஏற்படுத்திய கத்தோலிக்க திருச்சபையில்மட்டுமே அனைவரும் கிறீஸ்துவ ஐக்கியத்தைத் தேடும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** கிறீஸ்துவபோதனைகள் எல்லாமக்களுக்கும் பொதுவானதுஎன்ற உண்மையை ஜப்பானியர்கள் உணரும்படியாக மன்றுடிக்கொள்வது.

சத்திய வேத

# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
தைமாதம் 23-ந் திகதி

## ஞானோதயத்தின் ஆரம்பம்

எமதுநாடு கமத்தொழில், கைத்தொழில்முதலாம் தொழில்துறைகளிலே முன்னேறிச்சென்றுகொண்டிருக்கும்போது—முன்னேற்றத்திற்கான பலதிட்டங்களையும் முனைந்து செய்துகொண்டிருக்கும்போது—சுபீட்சம்சுபீட்சமென்று சுபீட்சத்தைக்கண்டடைய முயன்றுகொண்டிருக்கும்போது, சலப்பிரளயம்போன்று சடுதியாகஏற்பட்ட வெள்ளப்பிரவாகம் எல்லாவற்றையும் மட்டந்தட்டியவாறாய் நாட்டுக்கும், மக்களுக்கும் தாங்கமுடியாத பெரும் நஷ்டத்தையும், கஷ்டத்தையும் உண்டுபண்ணிவிட்டிருக்கிறது. இந்தப் பெரும்பிரவாகம் ஏற்பட்டுள்ளபகுதிகளைச் சீர்ப்படுத்தவும், அத்தாலேமக்களுக்கு உண்டான ஏக்கம்பறந்து, ஊக்கம்பிறந்து அவர்கள் ஓர் புதுச்சீவியம்தொடக்கவும் கோடிக்கணக்கிலே பணம் வேண்டும். காலமும்வேண்டும். ஆயினும், இந்தவெள்ளப்பெருக்கால் ஏற்பட்டுள்ளசேதங்களின் அறிகுறிகளையே ஒருவருடகாலத்தில் இல்லாமற்செய்துவிட வேண்டுமென்பதே அரசாங்கஞ் செய்துள்ள புனரமைப்புத்திட்டத்தின்நோக்கமாகும். அங்ஙனமாக, இலங்கை முன்பின்கண்டு கேட்டிராத பெருவெள்ளப்பிரவாகம்ஒன்று ஏற்படக்காரணம் அதுவாயிருக்கலாமா? இதுவாயிருக்கலாமா? நாம் இழைத்துள்ள அநீதியாயிருக்கலாமா? அன்றேல் நாம்செய்துள்ள கொடுமையாயிருக்கலாமா? என்றவாறான பலகேள்விகளும் இந்தவேளை தென்னிலங்கையிலுள்ள பலரின் உள்ளங்களிலும் எழுந்துகொண்டிருப்பது ஆச்சரியமன்று. அவற்றிலிருந்து அவர்களிலேசிலருக்கு ஞானமும் உதயமாகியுள்ளது. இதற்குக்காரணம்என்ன? இயற்கை நல்லபாடம் படிப்பித்திருப்பதே. அதனால் மனோநிலையும், சூழ்நிலையும் மாறும்நிலைகாணப்படுகின்றது. "இலங்கையின் எல்லாப்பகுதிகளிலும் சென்ற சிலவாரங்களாக மக்கள்அடைந்துள்ள கஷ்டநஷ்டங்களிலிருந்து அனைவரும் தமதுகடந்தகால வேற்றுமைகளைமறந்து நாட்டின் சுபீட்சத்திற்காக ஒருங்கே திரண்டுநிற்கும் புதியசகாப்தம் ஒன்று உதயமாகுமென நம்புகிறேன்" என்று உள்நாட்டுமந்திரி ஏ. பி. ஜயசூரிய யாழ்ப்பாணத்தில் பிரசித்தமாகக்கூறித் "தமிழரின் நண்பர்"என்னும் நல்லபட்டம் வாங்கிப்போயிருக்கின்றார். அதிகாரத்துக்குவந்தபின் இதுவரை யாழ்ப்பாணத்திலேகால்வைத்தறியாத பிரதமர் பண்டாரநாயகாவும் இந்தப்பிரளய வெள்ளத்தைத்தொடர்ந்து இங்குவந்து, "வெள்ளத்தால் மக்களுக்குஏற்பட்ட கஷ்டத்தின் பயனாக ஐக்கியஇலங்கையர் சமுதாயம்ஒன்று ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது" என்று சொல்லி வரவேற்புப்பெற்றுப் போயிருக்கின்றார். மூன்றாவதாக ரூஷியாவிலே இலங்கை ஸ்தானிகராக இருந்துவருகின்ற டக்றர் ஜி. பி. மலலசேகராஎன்ற புத்தசிங்கள பிரமுகருக்கும் இப்போது ஞானம்பிறந்திருப்பதாகப்புலப்படுகின்றது. தமிழ்மொழியை இப்போது தாம்படித்துவருவதாக இவர்கூறுவது வரவேற்கத்தக்கது. இவர் தம்மைப்போல ஏனையசிங்களவரும் தமிழ்மொழியைப் படித்துவரச் செய்வாராயின் அது மிகமிகவரவேற்கத் தக்கதாகும். அன்றுஇவர் கொழும்பிலே தமிழ்மக்களின் கூட்டம்ஒன்றில் பேசியபோது, "சுயநலதியாகமே உண்மையான அகிம்சை"என்று அகில-இலங்கையும் அறியும்படியாகப் பெருமுழக்கஞ் செய்யலாயினர். "ஒருநாட்டில் ஒரேயொருமொழிதான் அரசாங்கமொழியாக இருக்க வேண்டும்; அதுதான் சிறந்தது" என்று சாற்றுகின்றஇவர் அதற்கும் வாகடமுறையைத்தழுவாத ஓர்மாற்றுமருந்து எடுத்துக்கூறுகின்றார். அதாவது: "ஒரேயொருமொழிதான் அரசாங்கமொழியாய்இருப்பது சிறந்ததாயினும் அதனால் மற்றவர்களுக்கு அகிம்சையோ, அல்லயோ, தொல்லையோ உண்டுபண்ணமல் செய்தால்தான் அது சிறந்ததாகும்; மற்றவர்களைக் கொலைசெய்யாமலும், புண்படுத்தாமலும் இருப்பதுமாத்திரம் அகிம்சையன்று; இந்தச்சொல்லுக்கு விரிந்ததும்ஆழமுமான அர்த்தமுண்டு; சுயநலத்தை ஒழித்தல், மற்றவர்களின் மனஉணர்ச்சிகளைப் புண்படுத்தாதிருத்தல் முதலியவைகளை அடிப்படையாகக் கொண்டதுதான் அகிம்சை; மொழிநமக்கு முக்கியமானது; இதுதான் விலங்குகளைக்காட்டிலும் நம்மைஉயர்ந்த சிருட்டிகளாகச் செய்துள்ளது" என்று இவர்கூறுவதிலும் அர்த்தம்உண்டுதான். இவ்வாறெல்லாம் ஞானம்பேசுகின்ற டக்றர் மலலசேகரஅவர்கள் இலங்கையில் ஒரேயொருஅரசாங்கமொழியாகச் சிங்களமொழி அரங்கத்துக்குவந்தபின் அதுமறுசாகியத்தினரின்—தமிழ்ப்பேசும்மக்களின் மனஉணர்ச்சிகளைப் புண்படுத்திவிட்டதென்பதை — இம்சையை—அல்லைதொல்லையை உண்டுபண்ணிவிட்டதென்பதை—சுயநலம் உருவாடுகிறதென்பதை நன்குஉணர்ந்திருக்கிறார் என்பது துலாம்பரமாகின்றது. இலங்கைமக்களிடையே சமாதானம்இருந்தால், ஐக்கியம் இருந்தால், கடந்தகால வேற்றுமைகளை மறக்கவேண்டும். ஒருங்குதிரண்டு ஓர்ஐக்கியஇலங்கையை உருவாக்கவேண்டுமென்று சமாதானத்தையும், ஐக்கியத்தையும் குலைத்துவைத்தவர்கள் இந்தவேளை ஏன்கூச்சலிடவேண்டும். பிழைநிகழ்ந்துவிட்டது என்பதை மறைமுகமாக ஒப்புக்கொள்ளுகின்ற இவர்கள் தங்கள் பேச்சுகளால் அவற்றிற்கு மருந்துகாணமுடியாது. சுயநலஅரசியல்வாதிகள்சிலரின் செயலினால் இன்றுமொழிதான்வீண்வேற்றுமைகளைவளர்த்த, அமைதியைக் கலைத்து, அநீதிகளைவிளைத்துவருகின்றது. உண்மைத்தேசாபிமானிகள் ஆசிப்பதெல்லாம் இந்த அவலமானநிலை மாறவேண்டுமென்பதுதான். சமீபத்தில்ஏற்பட்ட பெருவெள்ளப்பிரவாகம் அனைவருக்கும் ஓர்நல்லஎச்சரிக்கையென்றே சொல்லவேண்டும். இதனைப்பறுவாய்பண்ணுது போகுமிடத்து என்னநடககுமோவென்று சிந்திப்பாரும் உளரேஎன்க.

## மேற்றிராணியாண்டவரின் திருமுகம்

**பிரிய குருமாரே! அருமையான பிள்ளைகளே!**

நம்முடைய ஆசனக்கோவிலிலே அடுத்துநிகழும் மாசிமாதம் 3-ந் திகதி திங்கட்கிழமைகாலை நாம் மூன்றுபிறதர்மாருக்குக் குருப்பட்டம் அருளவிருக்கிறோம். அதனால், நமதுமேற்றிராசனத்துக்குச் சர்வேசுரன் மேலும் மூன்றுகுருமாரைத்தரத் திருவுளங்கொண்டதற்காக அவருக்குப் பெரிதும்நன்றிபாராட்டக் கடமைப்பட்டவராகின்றோம். ஆயினும், இன்னும் எத்தனையோகுருமார் நமக்குத்தேவைப்படுகின்றனர்என்பது நீங்கள்எல்லாம் அறிந்ததே. அதனால், நமது மேற்றிராசனத்தில் தேவஅழைத்தல்கள் மேலும்அதிகரிக்கும்படியாக முன்சொன்ன குருப்பட்டதினத்துக்கு முந்தியதினமாகிய மாசிமாதம் 2-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் இம்மேற்றிராசனத்திலுள்ள சகலகோவில்களிலும் மிகுந்த பயபக்தியாக ஓர் திருமணித்தியாலம் அனுசரிக்கப்பட வேண்டுமென்றும், அதிலே தேவ அழைத்தலுக்கானசெபம் சொல்லப்பட வேண்டுமென்றும், குருப்பட்டம்பெறவிருக்கும் மூன்றுபிறதர்மாரையும் உங்கள்செபங்களிலே நினைவுகூரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

உங்களன்புள்ள

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.

யாழ்ப்பாண மேற்றிராணியார்.

* *

### தேவ அழைத்தலுக்காகச் செபம்

தமது வேளாண்மைக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேளாண்மையின்எசமானை மன்றாடுங்கள்என்று எங்களுக்குப் படிப்பித்தருளிய திவ்விய யேசுவே! தங்கள் திருஊழியத்தினால் ஆத்துமாக்களுக்கு இரட்சணியத்தையும், உமதுபிதாவுக்கு மகிமையையும் கொண்டுவரக்கூடிய அநேக பரிசுத்த குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரை உமது திருச்சபையிலும், விசேஷமாய் எங்கள்மேற்றிராசனத்திலும் பிறப்பித்தருள அனுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்று தேவரீரை இரந்துமன்றாடுகிறோம்.

ஆண்டவரே! இப்போது உமக்குமுன்பாக முழந்தாட்படியிட்டிருக்கும் எங்கள் மத்தியிலுமிருந்து அவர்களிற்சிலரைத் தெரிந்தெடுக்கத் தேவரீர் சித்தங்கொள்வீரானால், நாங்கள் சதாகாலமும் எங்கள் முழுஇருதயத்தோடும் தேவரீருக்கு நன்றியறிந்ததோத்திரஞ் சொல்லுவோம்.

மருதமடுச் செபமாலைமாதாவே! எங்கள்மத்தியில் பரிசுத்தரான தேவ தொண்டர்கள் அதிகரிக்கச்செய்தருளும், ஆமென்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள்

சமீபத்தில்உண்டான வெள்ளப்பிரவாகத்தாலே 5 லட்சத்து 50ஆயிரம்பேருக்கு அதிகமானமக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனரென்றும், 85,000 வீடுகள் சேதமடைந்துள்ளனவென்றும் சமூகசேவைத்தலைவர் தெரிவித்திருக்கின்றார். சேதமடைந்தவீடுகளைத்திருத்த 80 ரூபாவுக்குக் குறைந்ததொகை போதியதாயிருந்தால் அது உடனடியாகக் கொடுக்கப்படும். அதற்குக் கூடுதலாகவிருந்தால் முதல் 80 ரூபாவும், பின்னர் வீடு திருத்தப்படுவதைக் கவனித்துப் பகுதிபகுதியாக மேலும் கொடுக்கப்படும்.

## சிகறெற்புகையிலைப் பயிர்ச்சேதம்

வெள்ளப்பெருக்குக் காரணமாக யாழ்ப்பாணப்பகுதியிலே முந்நூறு ஏக்கர் சிகறெற்புகையிலைப் பயிர்ச்செய்கை சேதமடைந்துவிட்டதுடன் வேறும் 300 ஏக்கரில் பயிரிடுவதற்கெனப் போடப்பட்டிருந்த நாற்றுமேடைகளும் அழிந்துவிட்டனவென்று யாழ்ப்பாணம், சிகறெற்புகையிலை உற்பத்தியாளர்சங்க சமாசக்கூட்டத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால் சிகறெற்புகையிலைச்சங்கம் ஒவ்வொன்றுக்கும் வெள்ளத்தினால்நேர்ந்த நஷ்டத்துக்கு அரசாங்கம் நிவாரணம்அளிக்க வேண்டுமென்றும், சிகறெற்புகையிலை நாற்றுகள் இலவசமாகக்கிடைக்க வெள்ளக்கஷ்டநிவாரணசபை ஒழுங்கு செய்ய வேண்டுமென்றும்கேட்டுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட இருபிரேரணைகள் ஏகமனதாக நிறைவேறியுள்ளன.

## றெயின்வண்டிப் போக்குவரத்து

நாளை 24-ந்திகதி வெள்ளிக்கிழமை முதல் கொழும்பு-யாழ்ப்பாணம்-தலைமன்னாருக்கிடையில் றெயில்வேப்பிரயாணிகளின் போக்குவரத்து ஆரம்பமாகவிருக்கிறது. இதுசம்பந்தமாய்ச் சென்றதிங்கட்கிழமை பரிசோதனை நிமித்தமாகக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஓர்றெயின்வண்டி ஓடவிடப்படலாயிற்று. நாளைத்தினம் காலை 6-45 மணிக்கும், மாலை 7-15 மணிக்கும் கொழும்பிலே கோட்டை ஸ்ரேஷனிலிருந்து இருறெயின்வண்டிகள் காங்கேசன்துறைக்கும், தலைமன்னாருக்கும் புறப்படவிருக்கின்றன. ஆனால், இவைகள் சிலவிடங்களில் கெதிகுறைப்படும் காரணமாக ஒரு மணித்தியாலம்பிந்தியே குறித்தஇடங்களைப் போய்ச்சேரும்.

---

● பறக்குங்குண்டுகளை அழிக்கக்கூடிய அஸ்திரம்ஒன்றைக் கண்டுபிடிப்பதிலே ஐக்கியஅமெரிக்கதேசமும், பிரித்தானியும் வெகுதூரம் முன்னேறியுள்ளனஎன்றும், இத்தகைய அஸ்திரம்ஒன்றை ஒன்றுசேர்ந்து உருவாக்கக்கூடியநிலையைத் தற்போது இருநாடுகளும் அடைந்துள்ளனஎன்றும் "நியூஸ் வீக்" என்ற அமெரிக்கசஞ்சிகை சென்ற 14-ந்திகதி அறிவித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு அதிகாரம் இருந்தால் ....!

— K. K. J. —

1869-ம் ஆண்டு தொம்பொஸ்கோ புளோறென்ஸ் நகரில் இருந்து தூறின் பட்டணத்துக்குப் புகையிரதமார்க்கமாகப் பயணஞ்செய்துகொண்டிருந்தார். அவர் இருந்த பெட்டியில் வேறுபல பேரும் இருந்தார்கள். அவர்கள் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டும், விவாதித்துக்கொண்டுமிருந்தார்கள். அப்போது தங்கள்மத்தியில் ஒரு குருவானவரும் இருப்பதைக் கண்டதே அவர்கள் குருமாரையும், சந்நியாசசபைகளையும்—விசேஷமாக யேசுசபைக் குருமாரையும் கண்டித்துப் பேசினார்கள்.

அவர்கள் இவ்வாறு விவாதித்துக் கொண்டிருக்கும்போது, ஒருவர் யேசுசபைக் குருமாரை அறவே ஒழிக்க வேண்டுமென்றும், சமயபாடசாலைகள் எல்லாம் மூடப்பட வேண்டுமென்றும் கூறினார். எனக்கு அதிகாரம் இருந்தால் தொம்பொஸ்கோ எனும் ஒருவரால் நடத்தப்பட்டுவரும் அநாதசாலையை மூடிவிட்டு, அவரையும், அவரின் ஆதரவிலுள்ள பிள்ளைகளையும் உதைத்துத்தள்ளுவதே எனது முதல் வேலையாக இருக்குமென்றும்கூறினார். பின்னர் "இது ஒரு நல்ல காரியம் போல உமக்குத் தோற்றவில்லையா?" என்று தொம்பொஸ்கோவைப் பார்த்து அவர் வினவினார்.

தொம்பொஸ்கோ தமக்குஇயல்பாக உள்ள அன்போடும், உண்மைஉணர்ச்சியோடும் "எனக்கு அப்படியாகத் தோன்றவில்லை" எனப் பதில் இறுத்தார்.

அதன்மேல் இந்த நல்லகுருவானவரிடம் தொம்பொஸ்கோவைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள ஆசைகொண்டு அவரிடம் பலகேள்விகளைப் பொறித்தார்கள். அவரோ தொம்பொஸ்கோவுடன் தமக்கு நல்ல பழக்கமுண்டென்றும், ஆனால், அவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைத் தாம் ஒப்புக்கொள்ள முடியாதென்றும் கூறினார்.

இதைக்கேட்டதே அவர்கள் தொம்பொஸ்கோவின் கல்விமுறைகள் தங்கள் போக்குக்கு ஒவ்வாதவையென்று வற்புறுத்திக் கூறினார்கள். அவரோ "இந்த வீண்விவாதத்தை நிறுத்துவது நல்லாயிருக்கும்" என்று சொல்லும் பாண்மையாக அவர்களை உற்றுப்பார்த்தார்.

தங்களுக்குத் தேவைப்படாத குருமாரை உற்பத்திசெய்வதே தொம்பொஸ்கோவின் தொழில் என்றும், அது முற்றுந்தேவையில்லாத வேலையென்றும் அவர்களில்ஒருவர் அழுத்தந்திருத்தமாகச் சொன்னா.

தொம்பொஸ்கோ மௌனமாயிருக்கத்தான் விரும்பியிருப்பார். ஆனால், தமக்கு மிகவும் உகப்பான தொழிலை எவருந் தாக்க அவர் பார்த்துக்கொண்டிருப்பாரா? தொம்பொஸ்கோவுடன் தாம் கதைத்ததாகவும், அவருடைய அநாதசாலையைத் தாம் தரிசித்ததாகவும், தொம்பொஸ்கோவின் தொண்டு மிகவும் மெச்சத்தக்க தேவதொண்டென்றும், ஏழைஅநாதைகள் நல்ல கிறீஸ்துவர்களாகவும், நேர்மையான பிரசைகளாகவும்விளங்க அவர் தம்மாலானஉதவி செய்கிறார்என்றும அவர்களுக்கு அவர் விளக்கிக்கூறினார்.

அவ்வாறுகூறியதும் அவர்கள் "நீர் கூறுவதெல்லாம் மெய்யாய் இருக்கலாம்; ஆனால், நாம் இருக்குங்காலம் வேறுகாலம்; மத்தியயுகங்களின் நாட்கள் மலையேறிவிட்டன" என்று நளினமாகச் சொன்னார்கள்.

அத்தற்கிடையில் புகையிரதம் ஒரு ஸ்தானத்தை அடைந்துவிட்டது. அதில் இறங்கவேண்டியவர்கள் இறங்கினார்கள். அவர்களில் ஒருவர் குருமாரைத் துவேஷிக்கும் நண்பர். அவர் ஒரு கட்டடஅமைப்பு இஞ்ஜினியர்.

ஏறக்குறைய ஆறுமாதங்களின்பின் ஒருவிசேஷ கட்டடஅமைப்புத் திட்டத்துக்கு ஒப்பந்த கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டன. நமது இஞ்ஜினியரும் கேள்விப்பத்திரம் அனுப்பினார். சிலவேளைகளில் நமது கெட்டித்தனம் மாத்திரம் நமக்குப் போதாது வேறு பேரின் உதவியும் தேவைப்படுகிறது அல்லவா? எனவே, அவர் தமது சிநேகிதனை ஒருபிரபுவிடம் சென்று தான் அந்தவேலையை ஒப்பந்தம்எடுக்க உதவிசெய்யும்படி அவரைக்கேட்டார். பிரபுவோ மிகுந்த செல்வாக்குடையவராய் இருந்தபோதிலும் இந்தவிஷயமாகத் தாம் செய்வதற் கொன்றுமில்லையென்றும், வேண்டுமானால் தொம்பொஸ்கோவிடம் அவரை அனுப்பலாமென்றும், அவரால் உதவிசெய்ய முடியுமென்றும் கூறினார்.

நமது இஞ்சினியரோ தானும் தொம்பொஸ்கோவைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பதாகக் கூறினார். வல்டொக்கோவுக்குப் போகும்படியும், அங்கே தாம்அனுப்பியதாகக்கூறித் தொம்பொஸ்கோவைக் காணும்படியும், றோமாபுரியிலும், வத்திக்கானிலும் தொம்பொஸ்கோவுக்கு அதிகசெல்வாக்கு உண்டென்றும், கருதினல்அன்ரொனெல்லிஆண்டவருக்குத் தொம்பொஸ்கோ ஒருசொல்லுசொல்ல வேண்டியது தான், எல்லாவிஷயங்களும் திருப்திகரமாக நிறைவேறுமெனறும் பிரபு சொன்னார்.

சிலநாட்களுக்குமுன் உதைத்துத் தள்ள வேண்டுமென்று தான்விரும்பிய ஒருவரிடத்து எவ்விதம்செல்வதுஎன்ற எண்ணம் இஞ்சினியரின் தைரியத்தைத் தளம்பச்செய்தது. ஆனால், ஒப்பந்தமோ பெரிதாயிருந்தது. அதனால் பெறக்கூடிய ஆதாயமும்பெரியதே. அல்லாமலும், தொமபொஸ்கோ தன்னைஒருபோதும் காணவில்லையே என்றவாறான எண்ணங்கள் மனதில் ஊசலாட, ஒருவிதமாகத் தன்னைத் தேற்றிக்கொண்டு இஞ்சினியர் தொம்பொஸ்கோவிடம் சென்றார்.

நமதுஅர்ச்சியசிட்டர் அவரை மிக்க அன்பாக வரவேற்றார். வரவேற்று: "ஒருகுருவானவர் எப்போதும்சந்தோஷமாக உதவிசெய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார்; எவ்வளவுஉதவி செய்யமுடியுமோ அவ்வளவும்செய்ய நான்தயார்; இந்தக்கடிதத்தைக் கருதினல்அன்ரொனெல்லி ஆண்டவரிடம் கொடும்; உமதுவிஷயம் கைகூட வேண்டுமென்பதே எனதுஆசை" என்றார்.

இஞ்சினியர் தமதுநன்றியைத் தெரிவித்துத் தாம் றோமாபுரியில் இருக்கும்போது சுவாமியாருக்குத் தேவையான வேலைஏதும்இருந்தால் அதைச் செய்துகொடுக்க விருப்பங்காட்டினார்.

தொம்பொஸ்கோ சற்றுவேளை யோசித்துவிட்டு, "ஆம். நீர்செய்வதற்கு ஒன்றுஉண்டு; நீர் கருதினல் ஆண்டவரோடு இருக்கும்போது, தொம்பொஸ்கோவையும், அவர்பரிபாலிக்கும்பையன்களையும்அநாதசாலையிலிருந்து உதைத்துத்தள்ள வேண்டுமென்று மாத்திரம் தயவுசெய்து அவரிடம்கூறுதீர்" என்றார்.

நமதுஇஞ்சினியர் தொம்பொஸ்கோவைக் கூறுகுறிப்பாகப்பார்த்தார். சில மாதங்களின்முன் புகையிரதத்தில் சந்தித்தகுருவானவர் இவர்தான் என்று நிச்சயித்துக்கொண்டார். அவரின்மனம் பட்டபாடு எப்படியிருக்குமென்று சொல்லவும்வேண்டுமா? தான்தெரியாமற்செய்த குற்றத்தை மன்னிக்கும்படி அவரைக்கேட்டுக் கொண்டார். தொம்பொஸ்கோமட்டிலும், அவரின்திருத்தொண்டின் மட்டிலும் தனக்குஉண்மையாகவே அபிமானம் உண்டெனக்கூறிக் குருமாரைப்பற்றி இனிமேல் ஒருபோதும் தான்குறைகூறுவதில்லையென்றும் வாக்குப்பண்ணினர்.

இதுவே நமதுஅர்ச்சியசிட்டர் விரும்பியதாகும். அவருடைய இருதயம் சந்தோஷமடைந்தது.

இஞ்சினியர் றோமாபுரிசென்றார். ஒப்பந்தம்பெற்றார். ஏராளமான ஆதாயம்அடைந்தார். அதன்பலனாக, நல்ல கிறீஸ்துவராக மாத்திரமல்ல, தொம்பொஸ்கோவுக்குப் பெரியஉபகாரியாகவும் விளங்கினார். அதன்பின் அவர்கள்சந்திக்கும்போதெல்லாம் "உதைத்துத்தள்ளும்" கதையைப்பற்றிச் சிரியாதவேளையேகிடையாது.



## குருப்பட்டாபிஷேகம்

மாதாவின் சுத்திகரத்திருநாளாகிய வருகிற மாசிமாதம் 3-ந்திகதி திங்கட்கிழமைகாலை 7-30மணிக்கு நம்மேற்றிராணி ஆண்டவர்அவர்கள் குருமார்குழுவுடன் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவிலுக்கு எழுந்தருளி அங்கே அச்சுவேலியைச்சேர்ந்த வண. ஜே. பி. இம்மனுவேல் செல்வராஜா, மிருசுவிலைச்சேர்ந்த வண. எஸ். ஈ. நிக்கலஸ் குணசீலன், யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கலநாயகிகோவில் பங்கைச்சேர்ந்த வண. சி. பி. பெனற் கொன்ஸ்ரன்ரயின் பிறதர்மார்மூவருக்கும் குருப்பட்டம்எனும் திருப்பட்டம்அருளுவார். புதியகுரவர்கள் மூவரும் தத்தம் ஜனனபதிகளில் 5-ந்திகதி புதன்கிழமைகாலை முதன்முதலாகத் திவ்வியபூசை நிறைவேற்றுவார்கள்.

புத்தக மதிப்புரை

## சூழல்விளக்க வாசகம்

மூன்றம்வகுப்பு

ஆக்கியோன்:

**P. M. வேதநாயகம்பிள்ளை, B. A.**

பதிப்பகம்: **அர்ச். பிலோமினு அச்சகம்.**

விலை: **ரூபா 1 சதம் 25.**

பலாலி, அரசினர் ஆசிரியபயிற்சிக் கலாசாலைச் சமூகக்கல்வி விரிவுரையாளரான இந்நூல்ஆசிரியர் சமூகக்கல்வி உலகின்முற்போக்கான தேசங்களில் சரித்திரம், பூமிசாஸ்திரம், குடியியல் என்பன முக்கியமாக அடக்கியுள்ள சமூகக்கல்வி சூழல்வாயிலாக ஊட்டப்படவேண்டுமெனக் கடைப்பிடிக்கப்படும் முறையைப்பின்பற்றிப் பாடரூபமாக மூன்றாம்வகுப்புக்கென எழுதிவெளியிட்டிருக்கும் இந்தச் "சூழல்விளக்க வாசகம்" ஆசிரியர், மாணவர்களிடையே ஓர்புதியசூழலை உருவாக்குமென நம்புகின்றோம். சூழல்கருமங்களைப் பாடரூபமாகத் தரவேண்டுமென்று இதன் ஆசிரிடரைக் கேட்டுக்கொண்டவர் முன்னைநாள்வித்தியாதிபதியான திரு. ரி. டி. ஜயசூரியா அவர்களேயெனத் தெரியவருகிறது. சூழலை விளக்கமாகப் பிள்ளைகளுக்குப் படிப்பிப்பதைத் தற்போதுவித்தியாபகுதி கட்டாயமாக்கியிருப்பதால், இவ்வாசகம் பாடசாலைகளுக்குப் பெரிதும்பயன் அடையக் கூடியதாகும். இதிலே "சுத்தம் சுகம்தரும்" என்பதை முதலாகக்கொண்டுள்ள 28பாடங்களும், வினவிடைமுதலாம் கவர்ச்சிகரமான முறைகளைமேற்கொண்டு பிள்ளைகள் விளங்கக்கூடிய தன்மையிலே, இனிய தமிழ்நடையிலே சிறப்பாக எழுதப்பட்டிருக்கின்றன. சூழல்விளக்க சம்பந்தமானபடங்கள்பல இதனை அழகுபடுத்துகின்றன. வாசகமுறையாக இந்தச்சூழல்விளக்கம் தரப்பட்டிருப்பதும் ஓர்நல்லமுறையே. ஆசிரியர்அவர்கள் ஓர்புதியதுறையிலே தமது அனுபவஞானத்தைக்கொண்டு எழுதித்தந்திருக்கும் இந்தஅருமையான நூலை ஆசிரியஉலகம் நல்வரவேற்குமென நம்புகின்றோம். நமக்குஉதவிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம்25-ம் தேதி சனிவாரம் பிற்பகல் 4மணியளவில் அர்ச். சூசையப்பர்சிற்றாலயத்தில் நடைபெறும். அவ்வமயம் 4 அங்கத்தவர்களுக்கு வாக்குத்தத்தச்சடங்கு நடைபெறும். இக்கூட்டம் ஓர்ஆடம்பரமானதாயிருப்பதால் எல்லோரும் தம்உடுப்புகளை அணியவேண்டுமென்பதை மறவாதிருப்பார்களாக. பகுதித்தலைவர்கள் இதைத்தமது மேற்பார்வையில்உள்ள சகோதரர், சகோதரிகளுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தயவு செய்து நேரகாலத்தோடு சமுகங்கொடுக்குமாறு வேண்டுகின்றேன்.

A. S. FRANCIS OF MARY,

(தலைவர்)

சபைக்கர்த்தருக்காக

## மரண அறிக்கை

பிறப்பு—7-8-26

இறப்பு—15-1-58

ஊர்காவற்றுறை மேற்கைச்சேர்ந்த திரு. பிரான்சிஸ் இராசையாஎன்பவரின் இளையமருகரும், ஜேசுமலர் பெனடிக்ராவின் அருமைப்பத்தாவும், கொழும்புத் துறைமுகப்பகுதியில் பேர்திங் மாஸ்றர் (Birthing Master, Port Commission) ஆகக் கடமையாற்றிய திரு. பிலுப் யேக்கப்என்பவர் கடந்த மூன்றுமாதகாலமாக நோயுற்றிருந்து அந்திய தேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுச்சென்ற 15-1-58 -இல் பரமபதமடைந்தார். மறுநாட் காலை இனசனர், சிநேகிதர்புடைசூழக் கட்டளைக்குரவர் வண. வி. ஆர். தார்சீசியஸ் சுவாமியவர்கள் துக்கசங்கீதம் பாடிச்செல்ல இவரதுமேனி சந்தியோகுமையோர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கஞ்செய்யப்படலாயிற்று. இதைக்கண்ணுறும் அன்பர்கள் இவரது ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றாடும்படி வேண்டுகிறோம்.

இவரைப்பிரிந்து துயருறும்

மனைவி: **ஜே. ஜேசுமலர்**

மைந்தன்: **ஜே. அன்ரன்**

**உறவினர்**

● சவூதிஅரேபியநாட்டின் இப்னு சவூத்மன்னர் சமீபத்திலே சுவிற்சர்லாந்திலுள்ள லொசேன்நகரில் ஐந்து நாட்கள் தங்கியிருந்தபோது, மொத்தமாக 3,45,500பவுண் செலவிட்டாராம். ஹோட்டல், வாடகைக்கார்கள், பொதுச்செலவுகளுக்கென்று 12,500 பவுணும், தான்வாங்கிய கைக்கடிகாரங்கள், சுவர்க்கடிகாரங்கள், ஆபரணங்களுக்கென்று 1,51,000 பவுணும் அவர் செலவிடலாயினர். 1,82,000 பவுண்பெறுமதியுள்ள சில ஜேர்மன் கார்களையும் அவர்வாங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

### முஸ்லீம்களும் முன்னேற்றமும்

"தமிழ்ப்பேசும் முஸ்லீம்மக்கள் இன்றைய அரசாங்கத்தை நம்பியிருப்பதில் பிரயோசனமில்லை. அவர்கள் தமிழ்ச்சகோதரர்களுடன் சேர்ந்து, அவர்களின் ஆதரவோடு தங்கள்முன்னேற்றத்துக்காகப் பாடுபடவேண்டும்."

**ஜனாப் எஸ். எச். எம். சஹீத்,**
யாழ்ப்பாணம்.

### தெய்வங்கள் ஏவிவிட்டனவாம்

"இந்தநாட்டை அநீதிகளிலிருந்தும், அக்கிரமங்களிலிருந்தும் பாதுகாக்கும்பொருட்டு வெள்ளக்கஷ்டங்களைத் தெய்வங்கள் ஏவிவிட்டதாகப் பொதுமக்களிடையே ஒருவிதநம்பிக்கை நிலவுகிறது. இதை ஒப்புக்கொள்வதாயிருந்தால் நம்மைச்சோதிப்பதற்காகவே தெய்வங்கள் அவ்வாறுசெய்திருக்கவேண்டுமென நான் நம்புகின்றேன்."

**திரு. எல். பி. மதுருவ,**
பகுதி வருமானஅதிகாரி, பேராதனை.

### ஐந்துமாதகாலத்தில்!

"வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அநேகம்பேர் தமிழர்கள்தான். ஆகவே, இன்னும் 50 வருடங்களுக்கு மொழிப்பிரச்சினை எழாது — என்று ஒரு புத்தபிக்கு குறிப்பிட்டதாகக் கூறும் செய்திகேட்டு நாம் பெரிதும் மனவருத்தம் அடைந்தோம். எங்கள் அடிப்படை உரிமைகளுக்காகப் போராட 50 வருடம் எடுக்காது. வேண்டுமென்றால் நாங்கள் இன்னும் ஐந்துமாதங்களில் அதற்கு எங்களைத் தயார்செய்துகொள்ளுவோம்."

* * *

"புத்தம் சரணங் கச்சாமி; சங்கம் சரணங் கச்சாமி — இந்த வாக்கியம் இந்துக்களாகிய எங்களுக்கும் புனிதமான வாக்கியந்தான். இப்படியான ஓர்புனிதமார்க்கத்தைச் சேர்ந்த ஓர் புத்தகுரு இப்படியான ஓர் மனோபாவத்துடன் குறிப்பிட்டமை எங்கள் இதயங்களை அம்புதைத்ததுபோன்று இருந்தது. நாங்கள் மஞ்சள்வஸ்திரத்துக்கு மரியாதைசெய்கிறோம். ஆனால், இந்தவஸ்திரத்தை அணிபவர்களின் மனப்பான்மை இப்படியிருக்குமானால் நாங்கள் அந்தவஸ்திரத்துக்குத் தொடர்ந்து மரியாதைசெலுத்துவோம் என்பதற்கில்லை."

**திரு. வி. ஏ. கந்தையா,**
ஊர்காவற்றுறை, எம். பி.

### கூறியபடியெல்லாம் ஆடுகிறார்

"விப்ளவகார லங்கா சமசமாஜகட்சித்தலைவரான திரு. பிலிப் குணவர்த்தன கூறியபடியெல்லாம் பிரதமர்ஆடிவருகின்றார். பிரதமரின் உதவியைக்கொண்டு திரு. பிலிப் குணவர்த்தன சர்வாதிகாரத்தை ஏற்படுத்தமுயல்கின்றார். இவரின்முயற்சி வெற்றிபெற்றால் ஜனநாயகத்தில் எந்தவிதமானபற்றுள்ளவரும் அரசாங்கபதவியில் இருக்கமாட்டார்."

**திரு. மொண்ரேகு ஜயவிக்கிரம,**
முன்னைநாள் போக்குவரத்துமந்திரி.

### மந்திரி சிருட்டிக்கும் தொல்லைகள்

"நமதுநாடு வெள்ளத்தினால் நாசமாக்கப்பட்டுள்ளது. மண்சரிவினாலும், வெள்ளப்பெருக்கினாலும் பெருந்தொகையான ஆண், பெண், குழந்தைகள், மற்றும்பிராணிகளுடன் துன்புற்றுள்ளார்கள். ஆயிரக்கணக்கான வெள்ள அகதிகள் பட்டினிகிடக்கின்றார்கள். நம்முடையநாடு இத்தகையகஷ்டகாலத்திலே சிக்கிக்கொண்டிருக்கையில் உணவுமந்திரி திரு. பிலிப் குணவர்த்தன துறைமுகத்திலே அநாவசியமான தொல்லைகளைச் சிருட்டித்துக்கொண்டிருக்கிறார். இவரின் தேசபக்தியை இதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்."

**திரு. டட்லி சேனநாயகா,**
முன்னைநாள் பிரதமர்

### நெற்காணி மசோதா

"நெற்காணிமசோதா ஜனநாயக கொள்கைக்கு அப்பாற்பட்டது. அது சீனதேசத்திலே நடைமுறையில் இருந்துவருகின்ற கொள்கைகளைத் தழுவியிருக்கிறது."

**திரு. வி. ஏ. கந்தையா,**
ஊர்காவற்றுறை, எம். பி.

### நேர்மை, ஆர்வம் குன்றின

"யாழ்ப்பாணமக்களிடம் இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகளின்முன் காணப்பட்ட ஆர்வம், நேர்மை ஆதியாம்குணங்கள் இப்பொழுது குறைந்துவருகின்றன என்பதை மனவருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன். நேர்மையிருந்தால் எமதுவாழ்வு எப்பொழுதும் சிறப்பாகஇருக்கும்."

**திரு. வி. ஏ. கந்தையா,**
ஊர்காவற்றுறை, எம். பி.

### தமிழரும் மொழிப்போராட்டமும்

"தமிழ்மக்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டபோதிலும் கடைசித் தமிழ்மகன் இருக்கும்வரை தனது மொழிச் சுதந்திரத்தையும், சம உரிமையையும் இழக்கமாட்டான். தமிழ் மக்களுக்கு வெள்ளத்தால் பெருஞ் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழ்மக்களின் மொழிப்போராட்டம் நடைபெறுதென்று சிங்களச்சகோதரர்கள் நினைத்துவிடக்கூடாது. எமது உரிமைகளைப் பெறுவதற்குக் கட்டுப்பாட்டுடன் போராடத் தயாராயிருக்கிறோம்."

**திரு. ஏ. அமிர்தலிங்கம்,**
வட்டுக்கோட்டை, எம். பி.

### புத்தபிக்குவின் அகமகிழ்ச்சி

"வெள்ளப்பெருக்கு ஒருவிதத்தில் நன்மைதான் செய்திருக்கிறது. நாட்டைத் துண்டாடும் சமஷ்டிக்கட்சியின் முயற்சியை இந்த வெள்ளப்பெருக்குக் குறைந்தபட்சம் இன்னும் ஐம்பதுவருடங்களுக்குப் பின்போட்டுவைத்திருக்கிறது. ஏனெனில், இலங்கைத் திராவிடஸ்தானின் பெரும்பாகம் வெள்ளத்தில் அழிந்துவிட்டது."

**கனம். தல்பாவில சீலவன்ஸ தேரோ,**
எக்ஸத் பிக்குபெரமுனைத் தலைவர்.

### குரவரின் சேவைக்குப் பாராட்டு

"கல்முனை, அக்கரைப்பற்று, அம்பாறை ஆகியஇடங்களில் வசிக்கும்மக்கள் ஓர் அமெரிக்க கத்தோலிக்கமிஷனரியான வண. ஜி. ஜே. குக் சுவாமிகளின் தியாகஉணர்ச்சிக்கு என்றும் நன்றியுடையவர்களாய் இருப்பார்கள். சின்னமுகத்துவாரப் பாலம் உடைந்தபோது கடும் உழைப்பைக்கொண்டு அவர் ஓர்பாலத்தைக்கட்டினார். இதன் மூலம் வெள்ளத்தில்சிக்கியிருந்த நூற்றுக்கணக்கானோரை மீட்டுக்கொண்டுவரச் சீவாட்சக வள்ளங்களை அனுப்புவது சாத்தியமாகிவிட்டது."

முஸ்லீம் தேசிய அசெம்பிளியில்
**ஜனாப் லாபிர் காரியப்பர்**

### பதினெட்டுமாதகாலஆட்சி

"ஐக்கிய தேசியகட்சி ஆட்சி நடத்திய காலத்திலே அது இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்டியது. ஆனால், எம். ஈ. பி. அரசாங்கம் ஜனநாயகவழிகளிலே செல்லாது படிப்படியாகச் சர்வாதிகாரஆட்சிநடத்த முயற்சிக்கிறது. பதினெட்டுமாதகால எம். ஈ. பி. ஆட்சி நாட்டுக்கு அளவிடமுடியாத சேதத்தை உண்டுபண்ணியுள்ளது. வேலையில்லாப் பிரச்சினை, வாழ்க்கைச்செலவுகள், கொலைக்குற்றங்கள் அதிகரித்துள்ளன"

**திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன,**
முன்னைநாள் உணவு-விவசாய மந்திரி.

### கம்யூனிஸ்தர்களின் நாசவேலை

"கம்யூனிஸ்தகட்சி அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதாகக் கூறியபோதிலும் அதன் நடவடிக்கைகள் முரண்பட்டனவாய் இருக்கின்றன. விரல்விட்டுஎண்ணக்கூடிய கம்யூனிஸ்தகட்சி அங்கத்தவர்கள்சிலர் அரசாங்க ஆசிரியர்களாகச் 'ஸ்ரீலங்கா ரஜயே குருசங்கமய' என்ற ஆசிரியர்சங்கத்தில் இருக்கிறார்கள். இவர்கள் நாசவேலைகளையே தொழிலாகக் கொண்டுள்ளார்கள்."

**திரு. டபிள்யு. தஹநாயகா,**
கல்விமந்திரி.

# குருநகர் முதற்குரவரின் குருத்துவ வெண்பொன் யூபிலிவிழா

மாதகல் விசாரணைப்பங்குக் குரவர் வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியவர்களின் குருத்துவவெள்ளியூபிலிவிழாவை அவரின்ஜனனபதியான குருநகர்மக்கள் கடந்த 29-12-57 ஞாயிறுவாரம் குதூகலமாகக் கொண்டாடினார்கள். யூபிலிநாயகர் தமதுகுருத்துவ வாழ்க்கையிலே சர்வேசுரன் தமக்கு அருளிய சகலவரப்பிரசாதங்களுக்குமாகத் தமதுஜனனபதி மக்களுடனும், நண்பர்களுடனும்சேர்ந்து நன்றித்துதி தெரிவித்து அன்றுகாலை அழகுறச்சிங்காரிக்கப்பெற்றிருந்த சந்தியோகுமையோர்ஆலயத்தில் தேவதோத்திர பாடற்பூசை நிறைவேற்றினார். நண்பகல் மகாவந். மேற்றிராணியாண்டவரும், முப்பதின்மருக்கதிகமான குருப்பிரசாதிகளும் குருமனையில் அளிக்கப்பெற்றவிருந்தில்கலந்துகொண்டார்கள்.

பிற்பகல் 5மணிக்குயூபிலிநாயகர் பல குருப்பிரசாதிகள், அநேகபிரமுகர்கள், டலவிடங்களிலுமிருந்து வந்துகுழுமிய நண்பர்கள்புடைசூழ, மலர்மாலைகள் அணியப்பெற்று, வாத்தியவரிசைகளுடன் ஊர்வலமாகக் கடற்கரைமைதானத்திலுள்ள சென்ஜேம்ஸ் ஆண்பாடசாலைமண்டபத்திற்குஅழைத்துச்செல்லப்பெற்றார். இயற்கை, செயற்கை மலர்களால் சிங்காரிக்கப்பெற்றிருந்த பாடசாலைமண்டபம் தேசோமயமாய் விளங்க, டக்றர் கிறிசோஸ்தம் யோசவ் அவர்கள் தலைமைதாங்க வரவேற்புஉபசாரவைபவம் ஆரம்பமாயிற்று. பாவாலும், நாவாலும் சோபனவாழ்த்துகள் கூறப்பட்டன. சம்பத்திரிசியார் கல்லூரியிலே யூபிலிநாயகரின் குருவாயிருந்த செவாலியர் எஸ். அருளானந்தம் அவர்கள் தமது பழையமாணவரின் குணநலங்களை எடுத்துக்கூறித் தாம் குருவாயிருந்தவர் இப்பொழுது தமக்குக்குருவா யிருப்பதையிட்டுத் தமது மகிழ்ச்சியைத்தெரிவித்துச் சர்வேசுரன் மனிதஇரட்சணியஅலுவலில் எவ்வளவுதூரம் தயாளமுள்ளவர்என்பதை விளக்கித் தேன்மாரிபொழிந்தவாறாய்ச் சிறந்த சொற்பொழிவாற்றினார் குரவரின் இளமைப்பராயம், இன்னல் நீக்கும் அவரதுஇன்பசுபாவம், இளம்சிங்கேறுபோன்று அவரது வீரத்துவ தொண்டுஆதியவைகளை விளக்கிக்கூறிச் செவாலியர் டக்றர் சென்ஜோண் புவிராசசிங்கம்அவர்கள் நகைச்சுவைததும்பப்பேசிச் சபையோரை மகிழ்வித்து நின்றார். ஆயுள்வேதபண்டிதர் ஜி. பி. அன்ரனிஅவர்கள் யூபிலி நாயகரின் பிறர்சிநேகவாஞ்சையையும், நீதிநெறி நின்று செயலாற்றும் ஆற்றலையும், இன்னோரன்ன குணநலங்களையும்எடுத்துக்கூறிநின்றார்.

சுவாமிகளின் உடன் மாணவரும், அவரின் தற்போதைய விசாரணைப்பங்கைச்சேர்ந்தவரும், உபபிஸ்காலுமான திரு. சி. மே. யோ. லூயிஸ்அவர்கள் அவர்மட்டில் தமக்குள்ளகடமையைத் தெரிவிக்குமுகமாகச் சிலகூறிநின்றார். சுவாமிகளின் விரிந்தநோக்கும், பரந்த அறிவும், சிறந்தஆற்றலும் தம்மைச் சிறுவயதிலேயே அவர்பால் கவர்ந்ததென்றும், ஆயராம் எமது மேற்றிராணியாண்டவர்அவர்கள் மாதையம்பதி விசாரணைப்பங்குக்கு அவரைத்தெரிந்து அனுப்பியதிலிருந்து அவரின் திடசித்தம் நன்குவிளங்கக் கிடக்கின்றதென்றும் கூறினார். தாம் எடுத்தகருமம் எதிலும் நனிசித்தியே பெற்றிருக்கின்றார் எம்குரவர்என எடுத்துரைத்து, யூபிலிநாயகருக்குத் தமதுவிசாரணைப் பங்குமக்களின்சார்பில் நன்றிகூறி அவர் இன்னும்பல்லாண்டுயாழ்ப்பாணத் திருச்சபைஉத்தியானத்திலே குன்றிற் தீபமெனநின்றிலங்கித் தீர்க்காயுள்பெற்றுத் திடகாத்திரராய் வாழ்ந்து தமது குருத்துவ பொன், வைர யூபிலிகளையுங்காண எம்பெருமான் திருவருள்பாலிக்கவேண்டித் தமதுஉரையை முடித்தார்.

பலஅன்பளிப்புகள் யூபிலிநாயகருக்கு அளிக்கப்பட்டன. அவர் பலத்த கரகோஷத்திடையேஎழுந்து தமக்கு அளிக்கப்பட்ட உபசாரத்துக்காக நன்றிதெரிவித்துத் திருக்கர ஆசீர்ந்தார். குருநகர் மாதர்சங்கப் பெண்மணிகளால் நடாத்தப்பெற்ற இன்னிசைநாடகவிருந்துடன் விழாஇனிது நிறைவாயிற்று.

— நிருபர்

—※—

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**ஆசிரியருக்குப் பிரியாவிடை:** கடந்தஆறுமாதங்களாகத் தாண்டவன்வெளி, கிளெனிஆண்பாடசாலையில் சேவைசெய்து, பாடசாலையின்நன்மையையே கருத்திற்கொண்டு பிரிந்துசெல்லும் ஆசிரியர்ரி. அழகையா அருளப்பு அவர்கட்குப் பாடசாலைஆசிரியர்களாலும், மாணவர்களாலும் ஓர்பிரிவுஉபசாரம் சென்ற 23-12-57 திங்கட்கிழமை நடந்தேறியது. பிரியாவிடைநாயகரையும், அவர்சேவையையும் பாராட்டிப்பேசிய முகாமைக்காரர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமியவர்கள் இம்மாற்றத்தைத் தாம் ஒழுங்குபண்ணியதில் பாடசாலையின் நன்மைஒன்றையே தாம்குறிக்கோளாகக் கொண்டதாகவும், அவர் இம்மாற்றவிஷயமாய்த் தம்முடன் ஒருமனப்பட்டமைக்கு நன்றிபாராட்டுவதாகவும் கூறினார். தொடர்ந்து தலைமை ஆசிரியர் கே. எல். இராசேந்திரம்அவர்களும்அவர்சேவையைப் புகழ்ந்துபாராட்டினார். மாணவர்களும், ஆசிரியர்களும் அன்பளிப்புகள் வழங்கினர். ஈற்றில் உபசார வைபவம் இனிதே நிறைவாயிற்று.

**பிரிந்துசெல்லும் குரவர்:** கடந்த ஐந்துவருடங்களாகத் திரிகோணமலை மேற்றிராசனத்திலே சிறப்பாகத்தொண்டாற்றித் தற்போதுஇந்தியாவிலுள்ள அஜ்மீர்மேற்றிராசனத்தில் பணியாற்றச்செல்லும் வண. லியோ அல்பக்கூர்சுவாமியவர்கட்கு நமதுபங்குக் கிறீஸ்துவர்களால் அண்மையிலே ஓர்பிரியாவிடைவைபவம் நடத்தப்படலாயிற்று. அன்றுபிற்பகல் பிரியாவிடைநாயக சுவாமியவர்களால் எமதுஆலயத்தில் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டது. அதன்மேல்அவரை நமது பங்குக்குரவர் சமேதராய்க் கிளெனி ஆண்பாடசாலை மண்டபத்துக்கு அழைத்துச்சென்றதும், திரு. எஸ். ஈ. பெர்ணண்டோஅவர்களால் மாலைசூட்டப்பெற்றுக் கரகோஷங்களிடையே

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

நீங்கள் வாலிபப் பருவத்தை அடைந்துவிட்டீர்களா? உங்கள் வீட்டாரும் அப்படியே உங்களைக் கணித்துநடத்த ஆவலாயிருக்கிறார்கள். அவர்கள் உங்களில் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு அபாத்திரராய் நடவாதேயுங்கள். பலஅலுவல்கள் உங்கள் பொறுப்பில் விடுவார்கள். அவைகளை நீங்கள் பொறுப்புணர்ச்சியுடன் ஏற்க வேண்டும். வீட்டுஒழுங்குகள் சிலவற்றை உங்களுக்காகத் தளர்த்தி விடுவார்கள். வேறு ஒழுங்குகளைத் தளர்த்தவேண்டுமென விரும்பினால் கேட்டுச் செய்யுங்கள்.

உங்கள் கல்வியும், அத்துடன் நீங்கள் பார்க்கவிருக்கும் உத்தியோகமும் பணச் செலவுடன்கூடியது. அதற்கு வேண்டிய தியாகத்தை அப்பாவும் அம்மாவும் சந்தோஷத்துடன் செய்வார்கள். அதை உணர்ந்து நியாயமான ஊக்கத்துடன் நீங்கள் முயற்சிக்கவேண்டும். எல்லோருந் தியாகஞ்செய்ய நீங்கள் மாத்திரம் சொகுசைத் தேடுவது சரியன்று.

நியாயமான ஊக்கம் உங்களிடம் எதிர்பார்க்கப் படுவதால் நீங்கள் சுயவிருப்பமாய்ப் பாடப்புத்தகங்களைத் தேடாவிடில், உங்கள் பெற்றோர் அதைக் கட்டாயப்படுத்த வேண்டியிருக்கும். (உம்மைப் போன்று வீட்டில் இருசிறுவரும் மூன்று சகோதரிகளும் பராமரிக்கப் படவேண்டியவர்களாயிருக்கிறார்கள் என்பதும் ஞாபகமிருக்கட்டும்.)

வாழ்க்கை ரதம் சீராய்ச் செல்லவேண்டுமாகில் சொற்ப சிந்தனை எனும் எண்ணெய் அவசியம்.

உங்களன்புள்ள
அண்ணா.

—✻—

## இவர் யார்?

தாவீதின் கோத்திரத்தில் பிறந்த உத்தமர். தம்கற்பைச் சிறுவயதிலேயே காணிக்கையாகக் கொடுத்தவர். அண்டினோர்க்கு அபயமளிப்பவர். கீழ்மையான தொழிலைவிரும்பி வாழ்நாள் நடத்திவந்தவர். எவ்வளவு இன்னல்கள் வந்தபோதிலும் இறைவனை இறஞ்சியவர். ஓர்முறை தாவீதின் கோத்திரத்திற் பிறந்த விவாகமாகாத இளைஞர்கள் எல்லோரும் வரவேண்டுமென்று குரவரால் கட்டளை பிறந்தபோது அக்கட்டளையை மீறாமல் அங்குசென்றவர். எல்லா இளைஞரும் தேவாலயத்திற் கூடிய பின் எல்லோருக்கும் ஒவ்வொரு கோல் கொடுக்கப்பட்டது. பின் குரவர் கூறியதாவது: "எவருடைய தடிதழைத்துப் பூக்கிறதோ அவரே இப்பெண்ணை மணந்துகொள்ளத் தகுதிவாய்ந்தவர்" எனக்கூறிவிட்டுச் செபம்சொல்ல ஆரம்பித்தார். உடனே அங்குள்ளவாலிபர்களுள் கற்பை ஆண்டவருக்குஅர்ப்பணித்தவருடைய தடியே தழைத்துப் பூத்தது. உடனே அவ்விளைஞர் நடுங்கிக்கொண்டிருந்தார். அவ்விளைஞர் யார்?

"சூசையப்பர்"

— ஆ. யோசெவ் கனகசிங்கம்

---

## எண்ணெய்க் கலயம்

யோண்போஸ்கோ ஏழுஎட்டு வயதாய் இருக்கும்பொழுது ஒருநாள் அவருடைய தாய் அடுத்த ஊருக்குச் சென்றாள். அறையின் கூரைக்கருகில் தாம் ஒளித்துவைத்த ஏதோஒரு பொருளை எடுக்கவிரும்பினார் யோண். அதனால், கதிரையில் ஏறிநின்றுகொண்டு அப்பொருளை எடுக்க எட்டியபொழுது, தற்செயலாய் ஒருஎண்ணெய்க் கலயத்தைத் தட்ட, அது கீழேவிழுந்து உடைந்தது. எண்ணெயும் சிந்திவிட்டது.

நடந்ததையிட்டு யோணுக்கு வெகு துக்கம். உடைந்த பாத்திரத்துண்டுகளைப் பொறுக்கிஎறிந்துவிட்டு, எண்ணெயையுந் துடைத்துவிட்டார். நடந்ததை மறைத்துவிடாமல் தாயாருக்கு அறிவித்துவிடவேண்டுமெனத் தீர்மானித்தார். தாயின் துக்கத்தையும், தமக்குவரப்போகுந் தண்டனையையுங் குறைக்க வழிதேடினார்.

வெளியேசென்று ஒருகம்புமுறித்து அதைத் துப்புரவாக்கி வைத்துக்கொண்டு, தாயார்வரும்வழியில் அவரை எதிர்நோக்கி நின்றார்.

தாயைச் சந்தித்தவுடன் அவளை அன்புடன் தழுவி உபசரித்து, பயணத்தின் சுகசேமங்களை விசாரித்தார். அவருடைய தாயார் தகுந்த பதில்கொடுத்துவிட்டு, மகன்சந்தோஷமாய் இருந்தீராவென்றும், நல்லபிள்ளையாய் நடந்தீராவென்றும் விசாரித்தார்.

அதைக் கேட்ட சிறுவன் தான் முறித்துவைத்திருந்த தடியைத் தாயாரிடம் கொடுத்தார். ஏதோகுறும்பு செய்துவிட்டாயோ எனத்தாயார் கேட்டாள்.

"ஆம், அம்மா; இம்முறை எனக்குச் சரியான தண்டனை தரவேண்டும்" எனக்கூறி, எண்ணெய்க் கலயத்தை உடைத்தவிதத்தைக் கூறினார். எவ்வளவு வஞ்சகமின்றி அதைக்கூறித் தடியையுங் கொடுத்ததினால், தாயார் அவருடைய குற்றமற்ற தன்மையையும், புத்தியையும் விளங்கிக்கொண்டாள். இவருடைய திருநாள் தை மாதம் 31-ந் திகதி.

---

### சிந்தனைக்கு

கிறிஸ்துவின் நற்கருணைப் பிரசன்னமே எம்மில் கடவுள்கொண்டிருக்கும் எல்லையற்றஅன்பின் அடையாளமாகும்.

*　*　*

எரிவதற்குப் பொருளின்றி நெருப்பிருக்க முடியாது; அதுபோல அன்பும், தேவமகிமையில் ஆர்வமும், பரித்தியாகம்இன்றி நிலையாது.

*　*　*

ஞானத்தைக் கண்டடைந்தவனும், விவேகத்தை அபாரமாய்க் கொண்டவனும் பாக்கியவாளன்; வெள்ளியும், பசும்பொன்னும் அவைகளின்முன் [illegible].

## முகமூடி மனிதன்

டாண்...... டாண்...... டாண்என்று வகுப்புமுடிவை அறிவிக்கும் மணி அடித்தது. எல்லோர் மனதிலும் நாளைநடக்கப்போகும் வேவுப்போட்டியைப்பற்றிய எண்ணம் எழுந்துகொண்டிருந்தது. எல்லோரும் தத்தம் வீடுநோக்கிச் சென்றனர்.

ராமுவும், சோமுவும் நாளை நடக்கப்போகும் போட்டியைப் பற்றியே பேசிக்கொண்டு சென்றனர். சோமுவும் அப்போட்டியில் பங்கெடுத்துக்கொண்டதினால் அந்த வேஷம் தனக்குச் சரியாகப் பொருந்துகிறதா? என்றுபார்க்க ராமுவிடம் யோசனை கேட்டான். இருவரும் ஒன்றுசொல்லுவதும், அதுசரியில்லைஎன்று மற்றொன்று சொல்வதுமாக இருந்தனர். கடைசியில் ராமுசொன்ன யோசனைக்குச் சோமு சம்மதித்தான்.

இரவு ஒன்பதுமணி. இட்டு, அன்ரன், ஸ்டன்லி, தியாகராஜா ஆகியோர் இட்டுவின் வீட்டின்முற்றத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். நிலாவெளிச்சம் சிறிதாக அங்கு பரவியிருந்தது. திடீர்என்று அருகில்உள்ள மரத்தின் இலைகள் சலசலக்கும் சப்தம்கேட்டது. இட்டு அம்மரத்தை உற்றுநோக்கினான். ஒருகரியஉருவம் அவர்களைநோக்கி வந்தது. எல்லாரும் குப்புறவிழுந்து படுத்துக் கொண்டார்கள். இட்டு மாத்திரம் துணிச்சலுடன் முகமூடி மனிதனின் முகத்தில் ஓங்கிஅறைந்தான். குட்டுவெளிப்பட்டுவிட்டது. அப்படி முகமூடிபோட்டு நடித்தவன் சோமுதான். அங்கிருந்தவர்கள் எல்லோரும் ஏககாலத்தில் "சோமுவுக்குத்தான் நாளை பரிசு கிடைக்கும்" என்று கூவினார்கள். அதேபோல் அடுத்தநாள் போட்டி நடைபெற்றது. சோமு முதல்பரிசு பெற்றான்.

"எப்படி முகமூடிமனிதன்?"

— ரெக்ஸ் இராசையா

---

## அர்ச். அகுஸ்தீன்

அகுஸ்தீனுடையதாயார் மொனிக்கம்மாள். இவருடைய தந்தை ஒரு அஞ்ஞானியாய் இருந்தும், தன்மனைவியின் வேண்டுதலின்பேரில் ஞானஸ்நானம் பெற்றார். அகுஸ்தீன் புத்திக்கூர்மை உள்ளவர். அதனால், சகல விதசாஸ்திரங்களையும் திறமையுடன் கற்றுத் தமது 33-ம் வயதுவரை ஞானஸ்நானம் பெறாமல் பாவவழியில்நடந்து, பதிதவேதத்தைப் பற்றிக்கொண்டார். ஆனால், அவருடைய தாயார் தன்மகன் மனந்திரும்பும்படியாகச் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடிவந்தாள். தன் அருமை மகனுக்குப் புத்தி சொல்வாள். அதே கருத்துக்காகக் குருமாரையும், மேற்றிராணிமாரையும் மன்றாடும்படி கேட்பாள். அகுஸ்தீன் உத்தியோக நிமித்தம் வேறுதேசத்திற்குச் சென்றபோது அவர் தாயாரும் அவரைப் பின்பற்றியே சென்றாள். அங்கே அகுஸ்தீன் அதிசயவிதமாய் மனந்திரும்பினார். தமது ஆஸ்திஎல்லாவற்றையும் பிச்சைக்காரருக்குக் கொடுத்து ஞானஸ்நானம் பெற்று, உத்தமவழியில் ஒழுகினார். இவர் குருப்பட்டம் பெற்று, பிறருடைய ஆத்தும இரட்சணிய வேலையில் மகாஊக்கத்துடன் இருந்தார். இவருடைய அரிய புண்ணியங்களையும், [illegible]யும் கண்டு இவருக்கு மேற்றிராணிப்பட்டம் கொடுக்கப்பட்டது. இவர் பதிதரைஎதிர்த்து அநேகரைச் சத்தியவேதத்திற்குத் திருப்பினார். அகுஸ்தீன் தமது சீவியத்தை ஒருபுத்தகத்தில் எழுதிவிளம்பரப் படுத்தினார். இவர் உண்டாக்கின சபைக்குருக்களால் திருச்சபைக்குக் கணக்கற்றநன்மைகள் உண்டாயின. அகுஸ்தீன் இடைவிடாமல் தமது முந்தியபாவங்களை நினைந்து அழுது தபஞ்செய்து புண்ணியவழியில் மிகுநுணுக்கமாகஒழுகித் தமது 76-ம் வயதில் உயிர்துறந்தார். இவருடைய திருநாளைத் திருச்சபை ஆவணிமாதம் 28-ந்திகதி கொண்டாடுகிறது.

— "பாரி"

---

## தெரிந்துகொள்ளுங்கள்

✻ பூசைப்பரிசாரகரின் பாதுகாவலர் யார்?

அர்ச். பேர்க்மன்ஸ் அருளப்பர்.

✻ அப்போஸ்தலரும், முதலாவது சுவிசேஷத்தை எழுதியவருமான அர்ச். மத்தேயு நமது ஆண்டவரின் அழைப்புக்கிசைந்து அவரைப் பின்செல்லுமுன் என்னதொழில் பார்த்து வந்தார்?

வரியறவிடுவோராகத் தொழில்பார்த்து வந்தார். லேவிஎன்றும் இவர்அறியப்படுகின்றார். வரியறவிடுவோர், வங்கிக்காரர் இவர்களின் பாதுகாவலர் இவரே.

✻ அர்ச். பெலிசிற்றி, அர்ச். பெர்ப்பெற்சுவாஎனும் இருஅர்ச்சியசிட்டர்களும் யார்?

அர்ச். பெலிசிற்றி விவாகஞ்செய்த ஓர்அடிமை. இவள் மூன்றாம்நூற்றாண்டின் ஆரம்பத்திலே தனதுஎசமாட்டியான அர்ச். பெர்ப்பெற்சுவாவுடன் வேதசாட்சியாகக் கொல்லப்பட்டாள்.

✻ பேசாமலும், பயணஞ்செய்யாமலும் 90 வருடம் இருந்துவந்த அர்ச்சியசிட்டர்யார்?

வனவாசியான அர்ச். சின்னப்பரே.

✻ கொல்மன்என்ற நாமத்தைக் கொண்ட ஐரிஷ்காரரான அர்ச்சியசிட்டர்களாய் எத்தனைபேர் இருக்கின்றனர்?

120 பேர்வரையிலே இருக்கின்றனர்.

✻ ஒருவர் 65 வருடம் சீவித்திருந்தால் அவர் தனதுசீவியகாலத்தில் எத்தனை மைல்தூரம் நடந்திருப்பார்?

65,000 மைல்தூரம் — அதாவது பூமியின் சுற்றளவைப்போல இரண்டரைமடங்குக்கு மேற்பட்ட தூரம் நடந்திருப்பாரென மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

✻ இதுகாலவரை உலகில் கண்டெடுக்கப்பட்ட மிகப்பெரிய பொற்பாளம்எது?

ஹொல்ற்றர்மன் எனப் பெயரிய பொற்பாளமே. 7,600 அவுண்ஸ்நிறை கொண்ட இந்தப்பொற்பாளம் அவுஸ்திரேலியாவிலே புதிய தென்வேல்ஸிலுள்ள ஹில்என்ட்எனுமிடத்தில் 1872-ம் ஆண்டு கண்டெடுக்கப்பட்லாயிற்று.

✻ உலகில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட மிகப்பெரிய வெள்ளிப்பாளம் எது?

ரீரோய்என்ற வெள்ளிப்பாளமே. 2,750 அவுண்ஸ் நிறைகொண்ட இது மெக்சிக்கோவில் சொனோரா எனுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யாவரும் ஆசனங்களில் அமர்ந்ததும், இப்பங்கிலுள்ள பக்திச்சபைகளின் தலைவராலும், தலைவியாலும் சுவாமிகளின் சேவைநலம்பாராட்டிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. ஈற்றில் எமது பங்குக்குருவர் எழுந்து தாம்கையிடும் கருமங்களிலெல்லாம் சுவாமியவர்கள் தமக்கு வலதுகரம்போலிருந்து உதவி அளித்து ஆற்றிய அரும்பெருந் தொண்டுகளைப்பாராட்டி நன்றிகூறினார். அதன்மேல் அன்பளிப்புகள் வழங்கப்பட்டு, பரிமளிப்பான தேநீர் விருந்தும் நடைபெறலாயிற்று. ஈற்றில் பிரியாவிடைநாயகர் எழுந்து தமக்கு அளிக்கப்பெற்ற சிறந்தபிரிவுஉபசாரத்துக்காக நன்றிபாராட்டி அரியதோர் சொற்பொழிவாற்றித் தமது ஆசீர்வாதம் அருளிநின்றார்.

**கொடியேற்று விழா:** நமதுபங்கில் வழமைப்பிரகாரம் புதுவருடப் பிறப்புத் தினமன்று பிற்பகல் 5மணியளவில் செபமாலை, பிரார்த்தனை நடைபெற்று, அதன்மேல் பங்குக்கிறீஸ்துவர்கள் வறியோரின் சிறியகன்னிகாஸ்திரிமாருடன் ஒருங்கே சுற்றுப்பிரகாரமாகக் குருமனைசென்று, அங்கு பரிசுத்த காணிக்கைமாதாவின் திருச்சுரூபத்தையும், மாதாவின்கொடியையும் பங்குக்குருவர் சமேதராய் வாத்தியவரிசைகளுடன் ஊர்வலமாகக் கொடித்தம்பத்தருகே கொண்டுசென்றார்கள். அங்கே பங்குக்குருவரால் மாதாவுக்குஒப்புக் கொடுக்கப்பட்ட இப்பங்கானது புதுவருட ஆரம்பதினத்தன்றே மாதாவின் நோவனைகளை ஆரம்பிக்கக்கிடைத்தது பெரும்பாக்கியமென்றும், நமதுவிசுவாசம் உடலின் வெளிப்புறத்திலல்ல உள்ளுறுப்புகளிலும், நாம்புகளிலும்செறிந்து உறுதியாயிருக்க வேண்டுமென்றும், தேவதாயின்பேருளினால் நாம் ஓர் சிறிய சலப்பிரளயத்திலிருந்து அற்புதவிதமாகக் காப்பாற்றப்பட்டமைக்குப் பெரிதும் நன்றியறிதல் உள்ளவர்களாய் நோவனைகளைப் பக்தியருட்சியோடு நடத்தவேண்டுமென்றும் பல புத்திமதிகள்கூறி மாதாவின்கொடியை ஆசீர்வதித்து மாதாவின் நாமம் மேலோங்கிப் பறக்குமாறு ஏற்றிவைத்தார். பின்னர் சற்பிரசாத ஆசீர்வாதமும், காணிக்கைமாதாவின் திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பட்டன. தினசரி பிற்பகல் 6 மணிக்கு நோவனைகள் ஆரம்பமாகின்றன. மாசிமாதம் 2-ந்திகதி வழமைபோலத் திருநாள் கொண்டாடப்படுமென்பதுஈண்டுகுறிப்பிடத்தக்கது. — நிருபர்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1269**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

மானிப்பாய்
சபாபதி சவுந்தரநாயகம்
— வழக்காளி.

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு

1. சேகுசுல்தான் அப்துல்காதர் முகமட் சதக்கத்துல்லாவும்,
2. பெண் மைமூனும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1269-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1958-ம் ஆண்டு மாசிமாதம் 27-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4,412-உம், இன்னும் ரூபா 3,000-த்திற்கு 8-10-56 தொடக்கம், 4-4-57 வரையும் 100-க்குப் 10%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 5%வட்டியும், கோட்டுச்செலவு 241ரூபா 40சதமும். செலவில் 125ரூபா கொடுபட்டது.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார் பண்ணை மேற்கிறை. புளியடி ப. நி. 1 குளி 6½. (இன்னும் ஓர்உறுதியில் ப. நி. இ. 1 குளி 8⅞எனக் காட்டப்பட்டிருக்கிறது.) கல்வீடும், கிணறும், பயிர்வகைகளும், இன்னும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — முகிதீன் லெப்பையின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு — சாகித் கமீது முகமட்லெபே கைம்பெண் மொகமட் பாத்துமா நாச்சியாரின் ஆதனம். தெற்கு — சாகித் கமீது முகமட்லெபே கைம்பெண் மொகமட் பாத்துமா நாச்சியாரின் ஆதனமும், நாவாந்துறை ரோட்டும்.

செ. இரத்தினசபாபதி,
24, சப்பெல்வீதி, கொம்மிஷனர்.
யாழ்ப்பாணம். 21-1-58

---

# அந்தியகால அறிவித்தல்

யாழ்நகர் கஷ்டநிவாரண பாதுகாப்புச் சங்கம் லிமிற்ரெட்
இல. 4, கண்டிரோட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் — பதிவு இல. M. 110
திகதி: 16-1-1958.

இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் அங்கத்தவர்கள் தேகவியோகமடைந்தமையால் அன்னவர்க்காகச் செலுத்தவேண்டிய நன்கொடைப் பணத்தைத் தேகவியோகமடைந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்திவிடவும். தவறின் பிரமாணம் 2(2)ன்படி உரிமையை இழக்கவேண்டிவரும்.

காலகதியடைந்தவர் இல: 2096.
காலகதியடைந்தவர் பெயர்: சின்னப்பு பெண் அன்னம்மா.
விலாசம்: ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

கீழ்க்காணும்அங்கத்தவர்களின் சாட்டுதலாளர்களுக்குப் பின்வருமாறு நன்கொடைப்பணமும், சந்தாப்பணமும் முப்பது நாட்களுக்குள் வழங்கப்பட்டன.

(1) 1100 — மு. வியாளாச்சி (கைம்பெண்), அம்மன்ரோட், யாழ்ப். மரணசேவைப்பணம் ரூபா 1472-50. சந்தாப்பணம் ரூபா 16-00.

(2) 2350 — பொ. நடராசா, ஸ்ரான்லிரோட், யாழ்ப்பாணம். மரணசேவைப்பணம் ரூபா 1473-50. சந்தாப்பணம் ரூபா 6-30.

த. இராசரத்தினம்,
கௌரவ காரியதரிசி.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 355**

சின்னத்தம்பி வேலுப்பிள்ளை கந்தையா,
இடைப்பிட்டி
காரைநகர் கிழக்கு, காரைநகர்
— வழக்காளி.

எதிராக

1. நாகலிங்கம் சோமசுந்தரம், காமினிபடமாளிகை, மருதானை
2. பெண் புஷ்பராசமணி, No. 28, St. Anne's Lane, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில் M. B. 355-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1958-ம்ஆண்டு பங்குனிமாதம் 1-ந்திகதி (1-3-58) சனிக்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 5,000. இதில் 1-8-57 தொடக்கம், இறுபடும்வரைக்கும் 5%வட்டியும், கோட்டுச்செலவு 259ரூபா 95சதமும். இருமுறை முத்திரைச்செலவு 24ரூபா.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளிக் கோயிற்பற்று சிவியாதெருஇறை. "நறுவிலடிவளவும்," நறுவிலடி நில. பர. 16-இல் கிழக்குப்புறமாகக் குறிக்கப்பட்ட நில. பர. பத்தும், வீடுமுழுவதும், போட்டிக்கோவும், குசினியும், கிணறும். எல்லை: கிழக்கு — சிற்றம்பலம் இராசரத்தினத்தின் ஆதனம். வடக்கு — கொளும்புத்துறை தண்டாயுதபாணிகோவிலின் ஆதனமும், ஒழுங்கையும். தெற்கு — செல்லப்பா கனகரத்தினத்தின் ஆதனம். மேற்கு — செல்லப்பா அருளானந்தத்தின் ஆதனம். முற்பதிவு D 229/227.

தா. செல்லையா,
கொம்மிஷனர்.
37, கொளும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

---


**அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்**



சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்


### நத்தால், புதுவருட சோபனம்

சென்வின்சென்ற் டீ போல்சபை (அர்ச். சூசையப்பர் பந்தி)யின் அங்கத்தவர்கள், தங்கள் ஏழைகளுக்கு உதவி செய்யும் பொருட்டுத் தயாளகுணத்தோடு தருமம் ஈந்தருளிய சகல பரோபகாரிகளுக்கும் மனமுவந்து நன்றிகூறுகின்றார்கள். இன்னும் அர்ச். அந்தோனியாரின் தருமமுயற்சியை எங்கும்விளங்கவைக்க முன்னிற்கும் நேயர்களுக்கும் நத்தால், புதுவருடசோபனம்கூறி, ஆத்துமசரீரநன்மைகளை ஏராளமாய்ப் பொழிந்தருளும்படி கருணைநிறைந்த திவ்வியயேசுவைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்**

டிம்போடிரு: பி. எஸ். யோசேப்பு 1-00—பாஷையூர்: ரி. பறுணந்து 1-50, மூப்பர்பெண் லேனு 1-00, ஜி. சூசைதாஸ் 1-00 — மலாயா: எஸ். யோசேப்பு 13-85 — கற்பிட்டி: எஸ். பி. நோனீஸ் 1-00, ஈ. லம்பேட் 1-00 — ஓயா: ரி. ஏ. குரூஸ் 1-00—மாம்புரி: எஸ். செலஸ்ரீன்பிள்ளை 2-00 — கல்கமுவா: ஏ. மரியானுள் -50, வி. சந்தியாப்பிள்ளை 1-00, ஏ. பிலோமினு -50, எஸ். மரியாம்பிள்ளை 3-50 — திசுப்பனை: மிசெஸ் மேரி ரெட்ணம் 2-00 — முள்ளிக்குளம்: எஸ். ரி. லேனு 3-00, ஜி. வி. கூஞ்ஞு 1-00, மிசெஸ் பிரான்சிஸ் குரூஸ் 3-00, எம். எஸ். சில்வா -50 — பருத்தித்துறை: வி. எஸ். மரியாம்பிள்ளை 2-00 — முல்லைத்தீவு: எஸ். இளையதம்பி 2-00 — சுண்டிக்குளி: பி. சவிரிமுத்து 2-50 — மன்னார்: சி. ஏ. வி. பத்மராசா 1-00, எஸ். பர்ணபாஸ் 1-00 — கொஸ்லான்ட்: எஸ். கே. மரியாம்பிள்ளை 10-00 — மிருசுவில்: பி. ஜே. சிறில் 1-00 — மறிச்சுக்கட்டி: எஸ். ஜி. குரூஸ் 1-50 — இற்றூலை: பிறுங்அன்ரன் 2-00 — பண்டாரவளை: மிசெஸ் எஸ். வி. பீற்றர் 1-00 — கொழும்பு: ஜி. அந்திரேஸ் 3-00—டெகிப்பாக்கொடை: ஆர். எம். பி. பிள்ளை 2-00 — சுன்னுகம்: கே. ஏ. பொன்னையா: 5-00 — மாம்புரி: எஸ். அந்தோனி 2-00 — நேரியகுளம்: ரி. கிளாரம்மா 1-00 — நீர்கொழும்பு: ஓ. எக்ஸ். பெர்னுண்டோ 10-00 — சூராவத்தை: எஸ். ஆசீர்வாதம் 1-25 — லின்டுலா: ஆர். பெர்னுண்டோ 5-00, எம். பி. பிள்ளை 3-00—பாலைக்குடா: ஜே. டி. அல்மேதா 2-00 — செட்டிகுளம்: ஜே. இராயப்பு 5-00—அப்புத்தளை: எஸ். எம். யோசேப்பு 10-00 — நிந்தனி: வி. அந்தோனிப்பிள்ளை 3-50 — உடத்தலை: கிட்ணன்சாமி 2-00 — டிம்போடிரு: பி. எவ். சூசைப்பிள்ளை 1-00 — அக்கரபற்றனை: எலிசபேத் ஜோண் 5-00—விளாத்கோபிற்றியா: ஜே. தம்பிராசா 2-00 — நீர்கொழும்பு: எஸ். ஜி. செல்லத்துரை 5-00 — உசன்: என். அக்னேஸ் 2-00.

The Director,
St. Joseph's Conference.
Bishop's House,
JAFFNA.

சென் வின்சென்ற் டீ போல்சபைத்தலைவர்
மேற்றிராசன மாளிகை,
யாழ்ப்பாணம்.

---

## ORDER NISI.

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the intestate estate of the late Gnanapiragasam Joseph of Racca Road, Jaffna.

Deceased.

Testamentary Jurisdiction } No. 407

Jessie widow of Gnanapiragasam Joseph of Racca Road, Jaffna.

Petitioner.

Vs.

Minors, 1. Anne Catherine Ida daughter of G. Joseph
" 2. Anton Pushparasa, son of G. Joseph
" 3. Mary Hilda, daughter of G. Joseph
" 4. Francis Valentine Rapinthira Rasa, son of G. Joseph
" 5. Francis Jennett Linda,
G.A.L. 6. Pavilupillai Joseph of Rasavinthoddam.

Respondents.

This matter coming on for disposal before N. Sivagnanasundaram Esq., Addl. District Judge, Jaffna, on the 3rd day of February 1958 in the presence of Mr. J. Patrick, Proctor for Petitioner, and the affidavit and petition of the Petitioner having been read.

It is ordered that the said 6th Respondent be appointed Guardian-ad-litem over the minors 1 to 5 Respondents for the purpose of this action and that Letters of Administration in respect of the estate of the said deceased be issued to the Petitioner as his lawful widow, unless the said Respondents or any others interested shall appear before this Court on the 7th day of February 1958 and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

It is further ordered that the Petitioner do produce the said minors in Court on the said date.

Sgd. P. SRI SKANDA RAJAH,
District Judge.

This 3rd day of January, 1958.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனது உறவினர்களை மனந்திரும்பச் செய்யவேண்டுமென்று பரிசுத்தசதாசகாய மாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார் ஆகியோரிடம் கடந்தஆனி மாதத்திலிருந்து நான் மன்றுடிவந்த மன்றாட்டம் 14-ந்திகதி (14-1-58) அனுகூலமாய் நிறைவேறிற்று. இதற்காக இந்த மூன்று பரிசுத்தவாளர்களுக்கும் எனது நன்றிகூறி நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

இறம்பைக்குளம், வ. தா.
வவுனியா.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 23-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org